பக்கங்கள்: 19

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 27 ஞாயிற்றுக்கிழமை 13.11.2022 கதிர் 08

### இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாண சபை காலாவதியாகி நான்கு ஆண்டுகளாகி விட்டன. எனினும் மாகாண சபைக்குத் தெரிவான ஒருவர் அந்தத் தேர்தல் நடந்து 9 ஆண்டுகளின் பின்னரும் பதவியில் இருக்கின்றார். அவர் அவைத் தலைவர் ☞2

# பேச்சுக்குக் காலவரையறை தேவை என்கிறார் சம்பந்தன்

## ரணிலிடம் உத்தரவாதம் கேட்கிறார்



**கொழும்பு,நவம்பர் 13**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா ஒரு கால வரையறைக்கு உட்பட்ட உத்தரவாதம் வழங்கினால் அவருடன் பேசுவதற்குத் தயார் எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகளை பேச்சுக்கு ஜனாதிபதி அழைத்திருப்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ☞2



## திஸ்ஸ அத்தநாயக்கவும் அரசுப் பக்கம் பாய்வார்?



ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவும் அரசாங்கத்துடன் இணைந்து ஆதரவளிக்கவுள்ளார் எனச் ☞2

## இலங்கை நிலைமை படுமோசம் சர்வதேச மன்னிப்பு சபை கவலை

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியானது மக்கள் மீது பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள மக்கள் சுகாதாரம் மற்றும் உணவுக்கான உரிமைகளை அணுகுவதில் ☞2

## கொழும்புக்கு நடை பவனி புறப்பட்ட 2 தாய்மார் பாணந்துறையில் கைது!



'போராட்டத்தின் தாய்மார்கள்' என்று தம்மை அழைத்துக்கொண்டு களுத்துறையில் இருந்து காலி முகத்திடலுக்கு நடை பேரணியாகச் செல்ல முயன்ற இரு பெண்களை பாணந்துறை கொரகாபொல பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெருமளவான பொலிஸார் அங்கு வந்து இந்த இரு பெண்களையும் பொலிஸ் காவலில் எடுத்துச் சென்றனர்.

அதற்கு இடையூறாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மற்றொரு பெண் ஒருவரும் மற்றும் ஆண் ஒருவரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை களுத்துறையில் இருந்து இந்த நடைபயணத்தை ஆரம்பிக்கும் போது ☞2

## இலங்கை மீது தடைகள் விதிக்க பிரிட்டிஷ் எம்.பிக்கள் வலியுறுத்து



ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மேக்னிட்ஸ்க் பாணியில் பொருளாதாரத் தடைகளை விதித்து இலங்கை மீது நடவடிக்கை எடுக்குமாறு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்நாட்டு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நிலைமைக்கான பிரித்தானியாவின் பதில் குறித்த பின்வரிசை வணிகக் குழு விவாதத்தின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையை சர்வதேச குற்றவியல் ☞2



## நளினி, முருகன், சாந்தன் நேற்று மாலை விடுவிப்பு!

முன்னாள் பிரதமர் ராஜிவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட ஏழு பேர் வேலூர் உள்ளிட்ட பல்வேறு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். ☞2

## சூரியவெவ படகு விபத்து; ஒரு சிறுமி சடலமாக மீட்பு



சூரியவெவ மஹாவெலிகடஹார வாவியில் படகு கவிழ்ந்து காணாமல் போன மூன்று சிறுமிகளில் 10 வயது சிறுமியின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

18 மற்றும் 17 வயதுடைய காணாமல் போன ஏனைய இரு சிறுமிகளை மீட்கும் பணி ☞2

## பொருளாதாரக் குற்றவாளிகள் வெளியே; அதைத் தடுக்கப் போராடியோர் உள்ளே!

### விசித்திரமான நிலைமை என்கிறார் சஜித்

நாட்டை பொருளாதார ரீதியாக வக்குரோத்தாக்க முன்நின்ற, பொருளாதார குற்றத்தைச் செய்த கும்பல் வெளியே நடமாடித்திரிய, 'பொருளாதாரக் கொலையைத் தடுக்கப் போராடியவர்களை சிறையில் அடைக்கும் நிலையே இங்கு நடந்திருக்கிறது. இது ஒரு விசித்திரமான நிலை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தொடம்கஸ்லந்த தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே ☞2



காலைக்கதிர்
Kalaikkathir

### இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வீ.கே.சிவஞானம்.

இனி மாகாண சபைத் தேர்தல் எப்போதாவது நடத்தப்பட்டு, அதற்குப் புதிய அவைத் தலைவர் தெரிவாகும் வரை சிவஞானம் அப்பதவியில் தொடர்வார். இது வடக்கில் மட்டுமல்ல, இலங்கையின் 9 மாகாணங்களிலும் நிலைமை இதுவே. அவருடன் தொலைபேசியில் உரையாடினேன்.

அவரது மாகாண சபைக்கு முதல்வராக இருந்த நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் மீது செமக் கடுப்பில் இருக்கிறார் சி.வீ.கே.

தமிழ் கட்சிகள் ஒற்றுமைப்படும் சூழல் வந்திருப்பதாக தெரிவித்து, அது குறித்து நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. மகிழ்ச்சி வெளியிட்டிருக்கிறார் என்ற சாரப்பட வெளியான செய்திகள்தான் சிவஞானத்தின் கடுப்புக்குக் காரணம்.

தமிழ் கட்சிகள் ஒற்றுமைப்படுவது சிவஞானத்துக்குப் பிடிக்கவில்லையா என்று நீங்கள் கேள்வி எழுப்பலாம். அது வல்ல காரணம்.

தமிழ்க் கட்சிகள் பிளவு பட்டிருக்கின்றன எனத் தெரிவித்து, அது குறித்துக் குறை கூறி, அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா வெளியிட்ட கூற்றுக்கு, அவரின் கருத்து வெளியான அடுத்த நாள் ஐந்தாம் திகதி சனிக்கிழமை காலையில் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் பதிலடி கொடுத்த தகவல் வெளியாகியிருந்தது.

நிமால் ஸ்ரீபால டி சில்வாவின் கருத்து கடந்த நாலாம் திகதி மாலை 'காலைக்கதிர்' இதழில் பிரசுரமாகி இருந்தது. அச் சமயம் தனது குடும்ப நிகழ்வு ஒன்றுக்காக சுமந்திரன் நேபாளம் சென்றிருந்தார். அங்கிருந்தபடியே முன்னிரவில் தமது பிரதிபலிப்பை காலைக்கதிருக்கு அவர் தெரியப்படுத்தினார்.

'சமஷ்டி முறைத் தீர்வு என்பதில் தமிழ்த் தலைமைகள் ஒற்றுமை; அமைச்சர் நிமால் சிறிபாலவுக்கு சுமந்திரன் பதிலடி; சாக்குப் போக்கு கூறும் சுமாளிப்பு வேண்டாமாம்' - என்ற முதல் பக்கத் தலைப்புச் செய்தியுடன் ஐந்தாம் திகதி விடிகாலையில் காலைக்கதிர் பிரசுரமாகியிருந்தது. அதிகாலையில் அந்தப் பத்திரிகையை சுமந்திரன் வாசிப்பதற்கு முன்னரே, அதன் பிரதிபலிப்பு சுமந்திரனுக்குக் கிட்டிவிட்டது. அவருக்கு விடிகாலையில் ஒரு மின்னஞ்சல் செய்தி வந்திருந்தது - நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பியிடம் இருந்து. அமைச்சர் நிமாலுக்குச் சுடச்சுடப் பதில் கொடுத்தமைக்காக நீதியரசரின் மனம் நிறைந்த பாராட்டுகளை அந்த மின்னஞ்சல் செய்தி தாங்கி வந்திருந்தது. நீதியரசரின் அந்த மின்னஞ்சல் செய்திக்கு நன்றி தெரிவிக்கும் பதில் மின்னஞ்சலை அவருக்கு அனுப்பிவிட்டுத்தான், அன்று காலைக்கதிர் இதழில் என்ன செய்தி வெளியாகியிருக்கின்றது என்பதையே நேபாளத்தில் இருந்தவாறு தேடிப் பிடித்துப் பார்த்து வாசித்திருக்கின்றார் சுமந்திரன்.

சரி, இனி சிவஞானத்தின் சீற்றத்திற்கு வருகிறேன். சுமந்திரனை நீதியரசர் விக்னேஸ்வரன் பாராட்டுவதும், தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட வாய்ப்பு வந்திருப்பதாக அவர் கூறுவதும் சிவஞானத்திற்கு எரிச்சலைத் தந்துள்ளன.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உடைப்பை ஏற்படுத்தி, பிளவினை உண்டாக்கிய பிரதான சூத்திரதாரியே அவர் தான் (நீதியரசர்தான்). இப்போது அவர் புது நடிப்பு விடுகிறார். எல்லாம் 'அண்ணன் எப்போது சாவான், திண்ணை எப்போது காலியாகும்' என்ற எண்ணத்தில்தான். சம்பந்தன் ஐயாவுக்கு இப்போது இயலாத நிலைமை. இந்தச் சமயத்தில் மீண்டும் கூட்டமைப்புக்குள் புகுந்தால் தலைமைப் பதவியைக் கைப்பற்றலாம் என்ற நப்பாசைதான். தன் சுயநலத்துக்காகக் கூட்டமைப்பையே உடைத்தவர், இப்போது அதே சுயநலத்துக்காகத் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை குறித்துப் பேசுகின்றார். அவ்வளவும் நயவஞ்சக நடிப்பு...!" - என்று சீறினார் சி.வீ.கே. சிவஞானம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு வருடக்கணக்காக இழுபடும் சூழ்நிலையில் அதனை கட்சியின் ஸ்தாபகத் தினமான டிசம்பர் 18ஆம் திகதியாவது நடத்திவிட வேண்டும் என்று கங்கணம் கட்டி முயற்சித்து வந்த அவர், தனது ஆதங்கம் இனிச் சரிப்பட்டு வராது என்னும் யதார்த்தத்தினால் தமது கட்சி தலைமை மீதும் கடுப்பில் இருக்கின்றார்.

இதில் அவரும் தவறு என்பது என் கணிப்பு. தமிழரசுக் கட்சியின் இப்போதைய தலைமை வெறும் மண்குதிரை என்பது எப்போதோ தெரிந்த உண்மை.

அது தெரிந்து கொண்டு, தமது சுயநல அரசியலுக்காகவும், அந்த மண்குதிரையை நம்பித் தானும் பயணித்து, தமிழ் மக்களையும் பயணத்துக்குக் கூட்டி சென்று, நட்டாற்றில் அது கரைய, தமிழ் மக்களை அந்தரிக்கவிட்ட அரசியல் தலைவர்களின் தவறுக்கு அவரும் சேர்ந்துதான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பது என் கருத்து. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

***

யுத்தம் முடிந்து 13 வருடங்களுக்குப் பிறகு இப்போது முன்னாள் போராளிகள் குறித்து தமிழரசுக் கட்சியில் சிலருக்குக் கரிசனை பிறந்திருக்கின்றது. போராளிகளின் நலன் குறித்த விடயங்களை கையாள்வதற்காக நடவடிக்கை எடுக்க என்று இன்று காலை வவுனியா நகர மண்டபத்தில் ஒரு கூட்டமாம். நல்லது. நோக்கம் சிறந்ததாயின் பெறுபேறும் நன்றாக அமையும். வாழ்த்துக்கள்.

ஆனால், கோட்டை விட்ட எம்.பி. பதவியை ஊடகம் மூலம் மீள பெற்று விடும் விடாமுயற்சிக் கனவில் இருக்கும் ஒரு வர்த்தகரும், நியமன எம்.பி. பதவியேனும் கிட்டும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கும் சட்டத்தரணி ஒருவரும் நிகழ்வின் சூத்திரதாரிகள் எனத் தெரிகிறது. போராளிகள் நலன்புரி அமைப்பு என்று கால் ஊன்றி, அரசியல் செய்வதுதான் இலக்கு என சில வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன. ஆனாலும் அம்முயற்சிக்கு நான் முழு ஆதரவு.

போராளிகளுக்காக ஆயிரம் மலர்கள் மலர்ந்தாலும் நல்லது என்பேன். என்ன ஒரேயொரு குறை. அந்த நோக்கத்திற்காக, யுத்தம் முடிந்த காலம் முதல் சுமார் மூன்று, நான்கு ஆண்டுகள் தமிழரசு கட்சிக்குள் நான் அதை வலியுறுத்திய போது சுமந்திரனைத் தவிர யாரும் அதற்குக் கட்சிக்குள் கூட ஆதரவு தரவில்லை. நான் ஒருவிதை அப்போது ஊன்றினேன். எனினும் அதன் பெயரில் நான் அரசியல் செய்ய விரும்பவில்லை. அது முளைத்து, அதுவாக வளர ஆசீர்வதித்து, நின்றேன். என்றும் என் ஆதரவு, ஆசீர்வாதம், உரித்து அதற்கு உண்டு.

இப்போது புதுவிதைக்கு முளை போடுபவர்களும் அப்படி ஆசீர்வதித்து, உதவுவதுடன் நின்றால் நல்லது. அதனைத் தமது அரசியலுக்கான கருவியாக்காமல் என்பது என் கருத்து. அவ்வளவுதான்.

**- மின்னல் -**

### பேச்சுக்குக் காலவரை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

தமிழர் பிரச்சினை தொடர்பில் பேசநாம் தயாராகவே உள்ளோம். ஆனால் இதற்கு முன்பும் பேசினோம். அவை பாடமாகவுள்ளன.

அதனால் இனிமேல் அவை தொடர்பில் எவ்வளவு காலத்திற்குள் விடயத்தைப் பேசி முடிப்பதுவ் போன்ற விடயங்களுக்குக் கால வரையறை கண்டிப்பாகக் காணப்பட வேண்டும்.

வெறுமனே பேச்சு என்ற நிலை மட்டும் இருக்க முடியாது. அதற்கான தீர்வு என்பதே முக்கியம். அதனை எட்டும் வகையில் எனில் பேச தயாராகவே உள்ளோம்.- எனத் தெரிவித்துள்ளார்.

### கொழும்புக்கு நடை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரின் இடையூறுகள் ஏற்பட்ட போதும், இடையூறுகளுக்கு மத்தியில் பயணத்தை ஆரம்பித்திருந்தனர்.

பின்னர், வாத்துவை பிரதேசத்தில் மீண்டும் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

பின்னர், பாணந்துறை பகுதியில் வைத்து அவர்களை கைது செய்வதற்கான ஆயத்தங்கள் இடம்பெற்ற நிலையில் இருவரும் பஸ்ஸில் ஏறி பாணந்துறை கோரக்காபொல பகுதியை அடைந்துள்ளனர்.

அப்பகுதியில் வைத்து குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு பெண்களும் பொரளை மற்றும் கல்கிஸ்ஸ பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

### திஸ்ஸ அத்தநாயக்கவும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் பரவி வருகின்றன.

அந்தச் செய்திகளை நிராகரிக்கும் திஸ்ஸ அத்தநாயக்க, தான் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவே இல்லை என்று கூறுகிறார்.

மக்களுக்கு சாதகமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தால் எதிர்க்கட்சி என்ற ரீதியில் தமது கட்சி அதற்கு ஆதரவளிக்கும் என்றும் அவர் கூறினார்.

### இலங்கை நிலைமை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவால்களை எதிர்கொள்கின்றனர்.

நாட்டில் தற்போதுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

நிச்சயமற்ற வேலைகள் மற்றும் தினசரி ஊதியத்தை மட்டுமே வருமானமாக நம்பியிருக்கும் மக்களின் நிலை மற்றும் மலையக தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தநிலையில் நாட்டின் நெருக்கடி மற்றும் அதன் தாக்கங்கள் ஆழமடையும் மற்றும் பரந்த அளவில் பரவும் என்ற தீவிர கவலை உள்ளதாக மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

### இலங்கை மீது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்திற்கு அனுப்பவும், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை பெறுவதற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி இராணுவத்திற்கான அதிகப்படியான செலவினங்களைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய பங்குதாரராக உள்ள பிரித்தானியா, தமிழர்களுக்காக, இலங்கைக்கான சர்வதேச நாணய நிதிய நிதியுதவிக்கு நிபந்தனைகளை முன்வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகளுடன் இணங்கி 30/1 தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றும் போர்க்குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### நளினி,முருகன்,சாந்தன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் பேரறிவாளன் ஏற்கனவே உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். நேற்று முன்தினம் மற்ற ஆறு பேரும் விடுதலை செய்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து வேலூர் மத்திய ஆண்கள் சிறையிலிருந்து முருகன், சாந்தன் ஆகியோர் நேற்று மாலை 4:45 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் இலங்கை நாட்டை சேர்ந்தவர்கள் என்பதால், திருச்சியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமிற்கு பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

தற்போது பரோலில் வந்துள்ள நளினி காட்பாடி பிரம்மபுரத்தில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருக்கிறார். இவருக்கு இது வரை 10 முறை பரோல் நீடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அவரது பரோல் ரத்து செய்யப்பட்டு வேலூர் பெண்கள் சிறைக்கு பொலிஸார் அழைத்து வந்தனர்.

அங்கு வழக்கமான நடைமுறைகளுக்கு பிறகு அவரும் விடுதலை செய்யப்பட்டார். அவர் தமிழ்நாட்டை சேர்ந்தவர் என்பதால், காட்பாடி பிரம்மபுரத்தில் உள்ள அவரது உறவினர் வீட்டிற்கு சென்றார்.

அங்கு அவர் "நான் என் குடும்பம், குழந்தை, கணவர் எனக் குடும்ப தலைவியாக வாழப்போகிறேன்" என நிருபர்களிடம் கூறினார்.

சாந்தனின் வக்கீல் ராஜகுரு "சாந்தனின் பாஸ்போர்ட் காலாவதியாகி விட்டது. தமிழக அரசு அதைப் புதுப்பித்து தந்தால் அவர் இலங்கை சென்று விடுவார்." - என்று கூறினார்.

"ராஜீவ் கொலை வழக்கிலிருந்து மட்டும்தான் முருகன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவர் மீது 2020ஆம் ஆண்டு வேலூர் சிறையில் பெண் காவலரை ஆபாசமாக பேசிய வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு தனியாக நடக்கும்." எனப் பாகாயம் பொலிஸார் கூறினர்.

### பொருளாதாரக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர் -

நாட்டைப் பொருளாதார ரீதியாக வங்குரோத்தாக்க முன்நின்ற சில பிரதான தலைவர்களில் முன்னிலையில் இருந்த ஒருவரான அஜித் நிவார்ட் கப்ரால், எந்தப் பிரச்சினையும் இல்லாமல் தானும் தனது கும்பலும் செய்த பொருளாதாரக் குற்றங்களைப் பற்றி புத்தகங்கள் எழுதுகிறார்.

ஆனால், இந்த நாட்டை பொருளாதார ரீதியில் வங்குரோத்தடையச் செய்த பாரிய பொருளாதார குற்றங்களை இழைத்த கும்பலுக்கு எதிராக வீதியில் இறங்கிய சிறிதம்ம தேரர், முதலிகே உள்ளிட்டோரை சிறையில் அடைத்தமை என்னவொரு அநியாயமான செயல்!

பொருளாதார குற்றத்தைச் செய்த கும்பலே சிறையில் இருக்க வேண்டும். ஆனால் பொருளாதாரக் கொலையைத் தடுக்கப் போராடிய குழுவைச் சிறையிலடைக்கும் நிலையே நடந்திருக்கிறது.

நாட்டு மக்கள் தற்போது தேர்தலொன்றையே கோருகின்றனர். அதனைப் பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி போராடும். - என்றார்.

### சூரியவெவ படகு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் படகில் 8 பேர் பயணித்துள்ள நிலையில் அதில் 5 பேர் காப்பாற்றப்பட்டிருந்தனர்.

இதில் காப்பாற்றப்பட்ட 8 மாத குழந்தையின் நிலை கவலைக்கிடமாக இல்லையெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், உறவினர் வீடு ஒன்றுக்கு வந்த நிலையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மீன்பிடிக்க பயன்படுத்தப்படும் சிறிய படகில் 08 பேர் பயணித்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். வாவியின் நடுப் பகுதியில் படகு கவிழ்ந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com

# பாடசாலை புத்தகங்களின் விலையை குறைக்குமாறு கிரியெல்ல கோரிக்கை!

பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் பாடசாலை மாணவர்கள் அநாதரவாக உள்ளனர் என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனவே, பாடசாலை புத்தகங்கள் மற்றும் ஏனைய பொருள்களை இலகுவாக பெற்றுக்கொள்ளும் வகையில் அரசாங்கம் வேலைத்திட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



# உண்பதற்கு உணவில்லாத நிலைமையில் மாணவர்கள்!


## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வருத்தம்



பாடசாலை மாணவர்களுக்கு உண்பதற்கு உணவு இல்லாத நிலை காணப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

11 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது ஒரு பகுதியினருக்கு மாத்திரமே மதிய உணவை வழங்குவதாகவும் அதனை இரட்டிப்பாக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.









காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கூட்டமைப்பின் கட்டமைப்பு

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு தமிழர் தரப்புடன் நேரடிப் பேச்சுக்களை இந்த வாரத்தில் நடத்துவேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

நாட்டின் நிதி அமைச்சர் என்ற முறையில் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நாளை நாடாளுமன்றத்தில் அவரே பிரசன்னமாகி சமர்ப்பிக்கின்றார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் தமது உத்தேசத் திட்டம் தொடர்பில் மேலும் சில விவரங்களை நாளை தமது வரவு – செலவுத் திட்ட உரையில் அவர் வெளியிடக் கூடும்.

எது, எப்படி என்றாலும் இன்னும் சில தினங்களில் தமிழ் கட்சிகளுடன் தாம் நடத்தப் போகின்ற உத்தேச பேச்சுக்கான பூர்வாங்க திட்டமிடல்களை அவர் பூர்த்தி செய்து இருப்பார் என நம்பலாம். அவரது அறிவிப்புப் படி தமிழ் கட்சிகளுடன் அவர் முன்னெடுக்கவிருக்கும் உத்தேசப் பேச்சுக்கான நாள், நேரம் இன்னும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்வாரம் பேச்சு என்பதால் இது தொடர்பான உத்தியோகபூர்வ அழைப்பு எச்சமயத்திலும் தமிழ்க் கட்சிகளுக்குக் கிட்டக்கூடும்.

இந்தப் பேச்சுக்குப் பச்சைக்கொடி காட்டுவதாகக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கோடி காட்டி இருக்கின்றார்.

அதேசமயம் எந்தப் பேச்சும் கால வரையறைக்கு உட்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், அதற்கான உத்தரவாதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்கூட்டியே வழங்க வேண்டும் என்றும், முன்நிபந்தனை போன்ற ஓர் அறிவிப்பை தலைவர் இரா.சம்பந்தன் முற்கூட்டியே வழங்கி விட்டார்.

ஆனால், உத்தேசப் பேச்சு குறித்து, தமிழர் தரப்பில் பிரதான கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் தனக்குள் கூடி ஆராயக் கூட இல்லை. குறைந்தபட்சம் நாடாளுமன்றக் குழு கூட இது குறித்து இன்னும் பரிசீலிக்கவில்லை.

சற்று விளக்கமாக சொல்வதானால், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசுக் கட்டமைப்பு உருவாகி நான்கு மாதங்களாகின்றன.

இன்னும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பங்காளி கட்சிகளை அழைத்து, ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் குறித்து ஒன்று கூடி ஒரு கலந்தாய்வை – கலந்துரையாடலை – கூடச் செய்யவில்லை.

இதற்கிடையில் –

அரசுடன் பேசுவது, அதற்கான முன்நிபந்தனை வரையறை பற்றி எல்லாம் கூட்டமைப்புத் தலைமை பிரஸ்தாபிக்கத் தொடங்கிவிட்டது.

இனி உத்தேச பேச்சுக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க பக்கத்தில் இருந்து அழைப்பு வந்ததும், அந்தப் பேச்சுக்குப் புறப்பட்டுப் போவதற்கு அரை மணித்தியாலம் முன்னராகக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் இல்லத்தில் கூடி, இந்தப் பேச்சை எப்படி அணுகுவது என்று முடிவெடுத்து விட்டுச் செல்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதியின் அழைப்பு வெளியானதும் உடனடியாகக் கூடித் தமக்குள் கலந்துரையாடும் கட்டாயத்தை இன்னும் கூட கூட்டமைப்புத் தலைமை உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவரவர் தத்தம் பாட்டுக்கு கருத்துத் தெரிவித்து விட்டு, ஜனாதிபதியை சந்திக்கும் தினத்தன்று ஏதோ கூடி ஆராய்வார்கள். அவ்வளவுதான் கூட்டமைப்பின் கட்டமைப்புப் பாங்கு.

## வாகனங்களின் விலைகளில் வீழ்ச்சி வாகன இறக்குமதியாளர்கள் தகவல்

நாட்டில் வாகனங்களின் விலைகள் குறைந்துள்ளன என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வட்டி வீத அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணிகளால் வாகனங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன என சங்கத்தின் செயலாளர் பிரசாத் குலதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய நிலைமை காரணமாக விற்பனை செய்யப்படும் வாகனங்களுக்கு நிலையான விலை இல்லை. வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப் பட்ட நிலையில், கடந்த காலங்களில் நாட்டில் வாகனங்களின் விலைகள் வழக்கத்துக்கு மாறாக அதிகரித்தன. இதனால் வாகன விற் பனையும் குறைந்தது என்று தெரிவித்துள்ளார்.

## நுகேகொடவில் விபச்சார விடுதி சுற்றிவளைப்பு முகாமையாளர் உட்பட மூன்று பெண்கள் கைது

நுகேகொட பிரதேசத்தில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்றைச் சுற்றிவளைத்து மூன்று பெண்களையும் முகாமையாளரையும் கைது செய்துள்ளதாக பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி விடுதியில் விபச்சாரம் இடம்பெறுவதாக பாணந்துறை வலான மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உதய குமாரவுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், நிலைய பொறுப்பதிகாரிளின் பணிப்புரைக்கமைய பொலிஸ் பரிசோதகர் ஜனித குமார தலைமையிலானோர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். நுகேகொட நீதிவான் நீதிமன்றில் பெறப்பட்ட தேடுதல் உத்தரவுக்கமைய, அங்கு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புச் சோதனையின்போது வெல்லம்பிட்டிய, தெமட்டகொட, பாதுக்க பிரதேசங்களில் வசிக்கும் 20 முதல் 45 வயதுக்கு உட்பட்ட மூன்று பெண்கள் அங்கு தங்கியிருந்து விபச்சாரத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த விபச்சார விடுதியின் முகாமையாளரும் கைது செய்யப்பட்டார்.

## யாழ். தெல்லிப்பழையில் வீடுடைத்து கொள்ளை!

ஒருவர் கைது



யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் 20 வயது இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பகுதியில் உள்ள வீடொன்றில் ஆள்களற்ற நேரம் பார்த்து வீட்டை உடைத்து, அங்கிருந்த பொருள்கள் திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் உரிமையாளரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கட்டுவன் பகுதியை சேர்ந்த 20 வயதுடைய இளைஞனைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் வீட்டில் திருடப்பட்ட தொலைக்காட்சி, நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன எனவும், தொடர்ந்து இளைஞனிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையர் ஐவர் பெங்களூரில் கைது!

கடவுச்சீட்டு மோசடி காரணமாம்

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி மத்திய கிழக்கிற்கு செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த ஐவர் பெங்களூரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போலி கடவுச்சீட்டிற்காக 50 ஆயிரம் முதல் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை செலுத்த தயாராகயிருந்த ஐந்து இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செல்வி எஸ் ரவிகுமார், மணிவேலு, சிஜு, நிரோசா மற்றும் விசால் நாரணயணன் என்ற ஐந்து இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெங்களூர் மற்றும் மங்களூரை சேர்ந்த இருவரே போலி கடவுச்சீட்டை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸார்

## பேருவளையில் மாணிக்கக்கல் வர்த்தகரிடமிருந்து துப்பாக்கிகள், தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன!

பேருவளை, தினகொட பிரதேசத்தில் மாணிக்கக்கல் வர்த்தகர் ஒருவரின் வீட்டிலிருந்து 3 சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் 630 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தில் வர்த்தகரை கைது செய்துள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளை பொலிஸார் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, பேருவளை நகருக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான வகையில் பயணித்த ஒருவரை சோதனையிட்டபோது, அவரது சூட்கேஸில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளுக்கு அதற்குப் பயன்படுத்தப்படும் 50 ரவைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன் பின்னர் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து அவரது வீட்டிலிருந்து 3 சட்டவிரோத துப்பாக்கிகள்மற்றும்630 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன எனவும் பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022



"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்."
- தியோடர் ரூஸ்வெல்ற் -
(அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)

# ஒய்வூதிய கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை சரி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பம்!

## பிரதமர் தினேஷ் உத்தரவாதம்



ஓய்வூதிய கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை சரி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைவாக திறைசேரியின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் இரண்டு பகுதிகளாக இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக திறைசேரி பணம் விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், ஓய்வூதிய பணிக்கொடைக்காக ஏராளமானோர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர் என ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார் என நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை அனைத்து கொடுப்பனவுகளும் செய்யப்பட்டுள்ளன எனவும் ஜனவரி முதல் எஞ்சிய காலப்பகுதி வரை கொடுப்பனவுகளுக்கு தேவையான பணத்தை விடுவிக்க திறைசேரி ஒப்புக்கொண்டுள்ளதாகவும் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# மட்டு. மாநகரசபையில் நீண்டகாலமாக நிலவும் குப்பை பிரச்சினைக்கு நிரந்தரம் தீர்வு வேண்டும்!

## கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலர் கலாமதி பத்மராஜா கோரிக்கை



மட்டக்களப்பு மாநகரசபையில் நீண்டகாலமாக நிலவிவரும் குப்பை பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண அனைவரும் இணைந்து நடவடிக்கையெடுக்கவேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

தேசிய வாசிப்பு மாதத்தின் இறுதி நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் மாநகரசபையின் ஆணையாளர் நா.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் –

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் அண்மைக் காலமாக குப்பைகள் அகற்றுவது தொடர்பிலான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதை அறிவேன். நானும் இந்த பகுதியில் நிரந்தர வசிப்பிடத்தைக்கொண்டவர் என்ற அடிப்படையில் இந்த பிரச்சினையால் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

மேலும் இந்த பிரச்சினை இன்று, நேற்று ஏற்பட்ட பிரச்சினையாகவுள்ளமையால் இதற்கான தீர்வை மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கள்,அதிகாரிகள் இணைந்து வழங்கவேண்டும். அத்துடன் குப்பைகளை அகற்றுவதற்கு நிரந்தர தீர்வொன்று அவசியமாகும். –என்றும் குறிப்பிட்டுள்ளார்.


## சதொசவிலும் இனி மதுபானம்?

நாடளாவிய ரீதியில் 300 சதொச கடைகளுக்கு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை வழங்க கலால் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இதன்படி, கலால் அறிவிப்பு பிரிவு 902 இற்கு உட்பட்ட அனைத்து சதொச கடைகளுக்கும் உடனடியாக மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் மதுபான அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்த சில சதொச நிறுவனங்கள் உரிய தகுதிகளை பூர்த்தி செய்யாததாலும் பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாகவும் இந்த உரிமங்கள் வழங்குவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்த சில சதொச கடைகளுக்கு இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் திணைக்களத்தின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

Since 2014

# அருந்ததி

## இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25300 | வே | 1975**
யாழ்ப்பாணம் | இந்து
Germany | Manager
Diploma | அத்தம் (கன்னி)
179 செ.மீ

**25273 | கோ | 1986**
மாதகல் | இந்து | Canada
Tech Account Manager
சித்திரை (துலாம்) Degree
170செ.மீ | செவ்: 04

**24448 | வே | 1992**
ஏலாளை | இந்து Sri Lanka
Tech Writer | B.eng
சதயம் (கும்பம்)
180 செ.மீ

**25272 | வே | 1976**
யாழ்ப்பாணம் | இந்து | Switz
Volunteer Teacher
அஷ்வினி (மேடம்)
172 செ.மீ | செவ்: 01

**25299 | வே | 1987**
வேலணை | Newzland
Admin Staff | B.eng
ஆயிலயம் (கடகம்)
168 செ.மீ | சூ +செவ்: 04

**25274 | வே | 1994**
யாழ்நகரம் | இந்து
Business | A/L
உத்தராடம் (மகரம்)
167 செ.மீ

**25254 | வே | 1978**
மட்டக்களப்பு | Australia
Forklift Driver | Diploma
அஷ்வினி (மேடம்)
173 செ.மீ

**25264 | வே | 1989**
திருகோணமலை | இந்து
Seniror Software Engineer
Bsc | அத்தம் (கன்னி)
173 செ.மீ | சூ + செவ்: 03

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23341 | அ | 1988**
கம்பஹா | இந்து | Sri Lanka
Asst Accountant
Non RC | A/L
166 செ.மீ

**25293 | வே | 1994**
முல்லைத்தீவு | Venezuela
Development officer
Degree | மூலம் (தனுசு)
160 செ.மீ | சூ + செவ்: 06

**25303 | வே | 1996**
பந்தாரமுல்லை | Sri Lanka
Vocational Course
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ | செவ்: 02

**24199 | வே | 1990**
நல்லூர் | இந்து | MBA
Junior Excutive Asst
ரோகிணி (ரிஷபம்)
155 செ.மீ | செவ்: 07

**25262 | வே | 1998**
கோண்டாவில் | இந்து | SL
Asst Project Manager
Bsc | மகம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 07

**24283 | வே | 1994**
நெல்லியடி | இந்து | Divorced
Graduate Teacher
Bsc | ரேவதி (மீனம்)
160 செ.மீ | செவ்: 12

**25284 | வே | 1991**
அல்வாய் | இந்து | Sri Lanka
Doctor | MBBS
பூரம் (சிம்மம்)
165 செ.மீ

**23326 | வே | 1994**
உரும்பிராய் | இந்து | SL
Lecturer
Bsc | மூலம் (தனுசு)
163 செ.மீ

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
வழங்கும்

# வரன் தேடுவோம் வாருங்கள்

ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மண-மக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்

**யாழ்ப்பாணம்**
**செல்வமஹால் 20-11-2022**

**கொழும்பு**
**தமிழ்ச்சங்கம் 27-11-2022**

காலை 9.00 மணியிலிருந்து 2.00 மணிவரை

**இந்தியாவிலிருந்து**

# பிரபல ஜோதிடர்

**பட்டுக்கோட்டை சுப்ரமணியன்**

அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில், உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு

**நவம்பர் 20, 21, 22 யாழ்ப்பாணத்திலும்**

**நவம்பர் 24, 25, 26, 27 கொழும்பிலும்**



**முன்பதிவு செய்ய அழையுங்கள்**
**074 172 4524**

**அருந்ததி பிரைவட் லிமிட்ட் | +94 777 164 524**
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்



# சீனாவின் குஞ்சுகளை நம்பியே வடக்கில் கடல் அட்டைப் பண்ணை முதலாளிகள்!

- ந.லோகதயாளன் -

இலங்கையிலேயே வடக்கில் மட்டும்பெறும் கடலட்டைப் பண்ணைகள் தற்போதுவரை உத்தியோகபூர்வமாக 616 ஏக்கரில் வந்து விட்டன என்கின்றனர் அதிகாரிகள்.

இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே கடல் வளம் அதிலும் குறிப்பாக மீன், இறால், கணவாய் மட்டுமன்றி நண்டு என்பனவும் கடலில் அழிவடைந்து வருவதனால் 2030 ஆம் ஆண்டு கடல் உணவுகளும் பண்ணைகளில் மேற்கொள்ள வேண்டியிருக்கும் என உலக உணவு உற்பத்தி நிறுவனம் பரிந்துரைப்பதாக கூறப்படுகின்றது.

இந்த நிலைமையிலே வடக்கின் 4 கடல் மாவட்டங்களில் முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய 3 மாவட்டங்களும் கடல் அட்டை வளர்ப்பிற்கு உகந்த மாவட்டங்கள் எனக் கண்டுகொள்ளப்பட்டதனால் தாராளமாக பண்ணைகள் வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இதுவரையில் 355 பண்ணைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு 265 கடல் அட்டைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவற்றினைவிட மேலும் 209 பண்ணைகளிற்கு கோரிக்கைகள் உண்டு.

தற்போது குடாநாட்டில் உள்ள 265 பண்ணைகளில் மிக அதிகமாக வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 118 பண்ணைகள் உள்ளன. இந்த 118 பண்ணைகளும் 250 ஏக்கர் விஸ்தீரணத்தில் உள்ளன.

இதேநேரம் இரண்டாவதாக கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 273 கடல் அட்டைப் பண்ணைகள் உள்ளமையோடு மேலதிகமாக 200 பண்ணைகள் கோரப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தில் தற்போது 79 கடல் அட்டைப் பண்ணைகள் உள்ள அதேநேரம் அந்தோணியார்புரம் பகுதியல் 80 பண்ணை களுக்கும் இலுப்பைக்கடவையில் 80 பண்ணைகளுக்கும் விடத்தல் தீவில் 150 பண்ணைகளுக்கும் அனுமதி கோரப்படுகின்ற அதேசமயம் தேவன்பிட்டியிலும் 54 பண்ணைகளுக்கு கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளன.

கடல் பண்ணைகள் ஒரு புறம் எனில் மறுபுறத்தே இறால் பண்ணைகளும் ஆரம்பித்து விட்டன.



கடல் அட்டை குஞ்சை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை வடக்கில் அரியாலை மற்றும் மன்னார் ஆகிய இரு இடங்களில் மட்டுமே தற்போது வரையில் உண்டு. இதில் மன்னார் பண்ணை அரச பண்ணையாகவும், அரியாலை பண்ணை குயி - லான் பண்ணை என்னும் சீனர்களின் பண்ணையாகவும் உள்ளது.

குயி – லான் பண்ணை 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2022 மார்ச் மாதம் வரையான 5 மாத காலத்திற்குள் மட்டும் 4 லட்சம் குஞ்சு உற்பத்தி செய்துள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஆகவே, பண்ணைகள் அதிகரித்து, கடலட்டைக் குஞ்சு உற்பத்தித் தொழில்நுட்பத்தில் நம்மவர்கள் திறன் பெறாத இந்தச் சூழலில், முதலீடு செய்து பண்ணைகளை ஆரம்பித்த பின்னர் குஞ்சுகளுக்கு சீனாவிலேயே தங்கியிருக்க வேண்டிவரும். அந்த வகையில் இதுவும் சீனாவின் கடன் பொறித் திட்டம் போன்று, வடக்குக் கடலட்டைப் பண்ணை முதலீட்டாளர்களை சீனாவிடம் கையேந்தித் தொங்கில் கொண்டிருக்கும் இக்கட்டில் கொண்டுபோய் விடாதா என்ற கேள்வியும் உள்ளது.

உயர் ரக கடலட்டைக் குஞ்சுகள் என்ற பெயரில் இனவிருத்தி செய்ய முடியாத கடலட்டைக் குஞ்சுகளையே சீனப் பின்னணி நிறுவனங்கள் நம்மவரின் பண்ணைகளுக்குத் தொடர்ந்து விநியோகித்துக் கொண்டிருந்தால், பண்ணைகளில் முதலீடு செய்த நம்மவர்கள் குஞ்சுகளின் விநியோகத்துக்காகக் காலம் முழுவதும் சீனத் தரப்பிலேயே தங்கியிருக்க வேண்டியும் வரும். அத்தோடு இது, வடக்குக் கடலில் சீனப் பிரசன்னத்தை நிரந்தரமாக்கும் கபடத் திட்டத்தின் முக்கிய பகுதியா என்ற கேள்வியையும் சந்தேகத்தையும் எழுப்பாமல் இல்லை.

கடல் அட்டைக் குஞ்சுகளில் 2 மாதம் வரையான குஞ்சு 50 ரூபா. இவற்றை 6 மாதங்களில் அறுவடை செய்யலாம். அறுவடையின்போது 600 ரூபா வரை விற்பனை செய்ய முடியும். கடல் அட்டை வளர்ப்பிற்காக அமைக்கப்படும் பண்ணைகளிற்குள் எந்தவொரு உணவும் போடுவது இல்லை.

இந்த கடல் அட்டை பண்ணைகள் அமைப்பதற்கு ஒரு ஏக்கருக்கான அனுமதிக்கான கட்டணம் 2 ஆயிரம் ரூபாவும் பிரதேச செயலகத்திற்கு 9 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும் அதேநேரம் கரையோரத் திணைக்களத்திற்கு 5 ஆயிரம் ரூபாவும் செலுத்தப்படுகின்றது.

இந்த நிலைமையிலேயே மீனவர்கள் தமது பாரம்பரிய தொழில் பாதிக்கப்படுவதாக குற்றம் சுமத்தும் விடயத்தில் நீங்கள் ஏன் கரிசனை செலுத்தவில்லை என இப் பண்ணைக்கான இறுதி அனுமதியை வழங்கும் நெக்டா நிறுவனத்தின் வட மாகாண பிரதிப் பணிப்பாளரான நிருபராஜைத் தொடர்புகொண்டு கேட்ட போது –

எந்தவொரு பண்ணையும் உள்ளூர் மீனவ அமைப்பின் ஒப்புதல் கடிதம் இன்றி வழங்கப்படவில்லை. அத்தனை பண்ணைக்கும் இதே மீனவ சங்கங்களே ஒப்புதல் கடிதங்களை வழங்கின. தற்போதும் வழங்குகின்றன. அதற்கும் அப்பால் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர்கள் அந்த இடத்தில் அமைக்கப்படலாம் என்ற சிபார்சினையும் முன் வைத்த பின்பு பிரதேச செயலாளரின் நில அனுமதிக் கடிதம் மற்றும் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒப்புதல் என்பனவும் வழங்கிய பின்பே அனுமதியை வழங்குகின்றோம் என்கின்றார்.

இதேநேரம் 2030ஆம் ஆண்டுடன் மீன்பிடி நிறுத்தப்பட்டு பண்ணை முறைமையே வரும் என நெக்டா கூறுவது தொடர்பில் மீனவர்களிடம் கோரியபோது, ஆயிரம் ஆண்டுகளாக இடம்பெறும் ஓர் முறைமை 10 வருடத்தில் அழிந்து விடும் என படித்த துறைசார் நிபுணர்கள் கூறினர் எனக் கூறப்படுவதனை எந்த பாமரனும் நம்பமாட்டான். அதற்கும் அப்பால் இன்று இந்த பண்ணைகளில் 50 வீதமானவை கடற்றொழிலாளி அல்லாத முதலாளிகளே அதிகம் முதலிடுகின்றனர். அதனால் மீனவர் வெறும் கூலித் தொழிலாளியாக மாற்றப்படுகின்றான். பல வருமான முதலாளிகள் வங்கிகளில் பணத்தை வைப்புச் செய்தால் அரசிற்கு வரி செலுத்த வேண்டும் என்பதற்காக பினாமிகளின் பெயரில் இந்த கடல் அட்டைப் பண்ணைகளில் முதலிடுகின்றனர் எனக் கூறுகின்றனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண மீனவர் சங்க சமாசத் தலைவர் அ.அன்னராசாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

'கடல் அட்டைப் பண்ணைகளே சிறந்த முறை,அதுவே எதிர்கால தொழில் முறை' என அறிக்கை வழங்கிய நிபுணர் யார், உண்மை மீனவனை கூலித் தொழிலாளியாகவும் கடலையே தெரியாத பண முதலைகளிடம் இருக்கும் கறுப்பு பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றுவதற்குமா இன்று கடல்தொழில் பயன்படுத்தப்படுகின்றது? எல்லா சிபார்சும் பெற்றே அனுமதி வழங்கப்படுவதாக நெக்டா கூறினால் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் மனித உரிமை ஆணைக் குழுவின் முன்பாக கூறியது பொய்யான தகவலா? இதேபோன்று ஊடகவியலாளர்கள் சென்று பருத்தித்தீவில் எந்த அனுமதியும் இல்லாது 60 முதல் 70 ஏக்கர் பண்ணை இடம் பெறுவதனை உறுதி செய்து வந்தமை பொய்யானதா? பாரம்பரிய தொழிலாளி கடலிற்குள் செல்ல முடிய வில்லை, படகை இறக்க முடியவில்லை எனக் கூறுவது பொய்யானதா? – என கேள்விகளை அடுக்குகின்றார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் –

எமது நாட்டவர் எவருமே உண்ணாத உணவிற்கு (கடலட்டைக்கு) இவ்வளவு முக்கியத்துவம் அளித்து, உற்பத்தி செய்து, இத்தனை மில்லியன் டொலருக்கு ஏற்றுமதி செய்தோம் எனக் கூறுபவர்கள், இதே கடல் உணவுகளை அதாவது எமது மக்கள் உண்ணும் வகை கடல் உற்பத்திகள் ஆண்டிற்கு எத்தனை மில்லியன் டொலரிற்கு இறக்குமதி செய்கின்றீர்கள்? நெத்தலிக் கருவாடு எனவும் தகரத்தில் அடைக்கப்பட்ட ரின் மீன் எனவும் இறக்குமதி செய்வதற்காக வெளியேறும் டொலர் கணக்கை ஏன் மறைக்கின்றீர்கள்? மீன் பிடியில் அதிக ஏற்றுமதி டொலர் இல்லாது விடினும் கருவாடு மற்றும் ரின் மீன் இறக்குமதியைக் குறைத்து டொலர் வெளியேற்றத்தை நாமே தடுக்கின்றோம் என்பதனை அதிகாரிகளும் அரசும் மறைக்கின்றனர். – என்றார்.



இறால் பண்ணைகளைப் பொறுத்த மட்டில் மன்னாரில் 04 பண்ணைகள் உள்ளன. விரை வில் மேலும் 20 பண்ணைகள் வரவுள்ளன. இருக்கும் நான்கு பண்ணைகளும் மொத்தமாக 135 ஏக்கரில் அமைந்துள்ளன. இதில் ஒரு பண்ணை 65 ஏக்கரில் ரி.எஸ்.எவ் என்னும் நிறுவனம் நடாத்துகின்றது. மேலும் ஒரு பண்ணை 30 ஏக்கரிலும், இரு பண்ணைகள் தலா 10 ஏக்கரிலும் உள்ளன.

இதேபோன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இரு பண்ணைகள் உள்ளன.விரைவில் மேலும் 5 பண்ணைகள் வரவுள்ளன. இருக்கும் இரு பண்ணைகளில் ஒன்று 140 ஏக்கரிலும் மற்றையது 60 ஏக்கரிலுமாக மொத்தம் 200 ஏக்கரில் அமைந்துள்ளன. கிளிநொச்சி யில் தற்போது 3 பண்ணைகளும் உள்ளன.

இதற்கும் அப்பால் இறால் பண்ணைகளை மிக வேகமாக அதிகரிக்கத் திட்டமிடப்படுகின்றது. அதற்கமைய 2025 ஆம் ஆண்டில் 2 ஆயிரம் ஏக்கரில் இறால் பண்ணை அமைக்கும். வகையில் விடயங்கள் செயல் படுத்தப்படுகின்றன.

இதேநேரம் கடல் அட்டைகளைப் பொறுத்த மட்டில் ஒரு ஏக்கருக்கு 4 ஆயிரம் குஞ்சுகள் வேண்டும். 6 மாதத்துக்கு ஒரு தடவை 2 ஆயிரம் குஞ்சு என்ற அடிப்படையில் ஆண்டுதோறும் விடப்பட வேண்டும். இதன் அடிப்படையில் வடக்கிற்கு வருடம் ஐம்பது லட்சம் கடல் அட்டைக் குஞ்சுகள் வேண்டும்.

(16 பக்கம் பார்க்க)

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com



# A Different Kind of Language



How do people hear? Look in a mirror, and you will see that your ears are shaped a little like a funnel. That shape amplifies sounds you hear, which means it makes them louder.

Those sounds travel in waves from your outer ear (the part that you can see) into a tiny tube called the ear canal. At the end of the ear canal is your eardrum.

When sounds reach your eardrum, they make it vibrate, or move back and forth. On the other side of your eardrum are the three smallest bones in your body. They are in your middle ear. When your eardrum vibrates, those three bones also vibrate. One of them pushes on the oval window. That is a special covering for your inner ear. When the oval window gets pushed in and out, it causes vibrations in a special fluid in your inner ear.

That vibration is sent to special nerve cells. Those nerve cells tell your brain what you are hearing.

**1. What is this text about?**

A. It is about bones in the human body.
B. It is about how people hear.
C. It is about eardrums.
D. It is about the human brain.

**2. Which of these happens first when a person hears something?**

A. The oval window gets pushed in and out.
B. The eardrum vibrates.
C. Nerve cells tell your brain what is heard.
D. Sound is amplified in the outer ear

**3. Which word means to move back and forth?**

A. amplify B. pushes
C. vibrate D. eardrum

**4. Which is a synonym for fluid?**

A. liquid B. eardrum
C. oval window D. funnel

**5. Which word refers to making sound louder?**

A . vibrate B. amplify
C. cover D. nerve

Sounds can be loud or soft; they can also have a high or low pitch. So when we measure sound, we measure its loudness and its pitch. The loudness of a sound is measured in decibels (dB). For example, when you speak in a normal voice, the sound you make is about 60–70 dB. A rock band's performance generates about 100–120 dB of sound. It is important not to listen for a long time to very loud sounds; they can damage your hearing.

The pitch of a sound tells us how fast the sound waves are vibrating. High-pitched sounds such as violin music make sound waves that vibrate very quickly. Low-pitched sounds such as large drums make sound waves that vibrate slowly. We measure the frequency, or speed, of those sound waves in hertz (Hz). The higher the pitch of the sound, the more quickly the sound waves move up and down. The lower the pitch, the more slowly the sound waves move up and down.

**1. What do we know about sound based on the first sentence of the text?**

A. It is measured in hertz.
B. It is measured in decibels.
C. It can damage your hearing.
D. Sounds vary.

**2. What parts of a sound can be measured?**

A. loudness and pitch B. violin and drum
C. motorcycle and voice D. waves and pitch

**3. Which is the root word in frequency?**

A. quench B. freckle
C. free D. frequent

**07) இத் துறை மூலமாக உங்களுக்கு போதியளவிலான வருமானம் கிடைக்கப் பெறுகின்றதா?**

இல்லை. மக்களிடம் இருந்து கிடைக்கும் வாழ்த்துக்களும், பாராட்டுக்களுமே எங்கள் வருமானம்.

**08) ஒரு இயக்குனராக பணியாற்றும் போது எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து?**

பொருளாதாரம் தான் மிகப்பெரிய சவாலாக உள்ளது. கதைகளை எழுதும் போது சில காட்சிகளுக்கான செலவு அதிகமாக தேவைப்படுகின்றது. அதனால் கற்பனைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அத்தோடு சினிமாவிற்கான தொழில்நுட்பவியலாளர்கள், கலைக்கூடங்கள்(studios) மற்றும் சில திறமைகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கின்றது. அதனால் பொருத்தமான திறமைகளைத் தேடி தெரிவது சிரமமாக இருக்கிறது.

**09) திருகோணமலை மாவட்டத்தில் குறுந்திரைப் படங்களுக்கான பார்வையும், வரவேற்பும் எவ்வாறு உள்ளது?**

சிறப்பாக இருக்கிறது. தரமான படைப்புகளை சிறப்பான முறையில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பொழுதில் நம்மவர்கள் பாராட்டுவதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும், பிழைவிடின் திருத்துவதற்கும் தயாராகத் தான் இருக்கிறார்கள் என நினைக்கிறேன்.

**10) அண்மையில் உங்களது இயக்கத்தில் உருவான கொஞ்சம் தண்ணி தாங்க குறும்பட அறிமுக விழாவானது மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்தது. அத் தருணம் குறித்து?**

எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நெகிழ்வான தருணம். ஒரு இயக்குனராக, நடிகனாக அரங்கேறிய தருணம் அது. இந்த நிகழ்வை நடாத்த ஆதரவு தந்த எனது பாடசாலையின் விவேகானந்தா கலை மேம்பாட்டுக் கழகம், எனது அதிபர் ரவிதாஸ் சேர், எனது குருவான சிவசங்கரன் சேர் மற்றும் எனது அனைத்து ஆசிரியர்கள், எனது படக்குழு மற்றும் ஆதரவு வழங்கிய அனைத்து நண்பர்கள், பார்வையாளர்கள், ஊடகங்கள் அனைவருக்கும் இத் தருணத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**11) இத்துறையில் உங்களுடன் இணைந்து பயணிப்பவர்கள் குறித்து?**

கொஞ்சம் தண்ணி தாங்க குறும்படத்தின் நடிகர்கள் சஞ்சீவன், பிரஷாந், விஷ்னிகா, ஒளிப்பதிவாளர் வசந், படத்தின் எடிட்டர் குணேகாந் மற்றும் படத்தின் இணை தயாரிப்பாளர்களான தமிழன்பன் மற்றும் கோபிசாந் ஆகியோர் எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி நட்புக்காக இவ் படத்தில் வேலை செய்திருக்கின்றனர். மேலும் நண்பன்கோபிசாந்மற்றும்குணேகாந்துடன் இணைந்து பாடல்களையும் பாடியிருக்கின்றேன். நண்பன் தமிழன்பனுடன் இணைந்து இன்னுமோர் குறும்படத்திற்கான கதையும் எழுதிக்கொண்டிருக்கிறேன். நண்பர்களே எனது முழு பலமும் அவர்கள் இன்றி நான் இல்லை.

**12) இக்கலைத் தவிர வேறு திறமைகள் குறித்து?**

பாடல்ளை எழுதி பாடி வெளியிடுகிறேன். குறிப்பாக சொல்லிசைப் பாடல்கள் மற்றும் பல மேடைகளில் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் அறிவிப்பாளராகவும் ஒரு பாடலில் எடிட்டராகவும் கடமையாற்றியிருக்கிறேன். பாடசாலைக் காலங்களில் வில்லுப்பாட்டு பாடுதல், மிருதங்கம் மற்றும் தவில் இசைத்தல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருக்கிறேன். மேலும் குறும்படங்கள், நாடகங்களில் dubbing உம் செய்திருக்கிறேன். கவிதைகளும் எழுதுகிறேன். மேலும் இன்னும் பல கலைகளையும் கற்க அவா.

**13) எதிர்காலத்தில் தயாரிக்கவிருக்கும் படைப்புகள் குறித்து?**

ஒரு சில பாடல்களும், குறும்படங்களும் வெளிவர தயாராகின்றன. வா மச்சி இயக்கத்தில் இது வரை போதும் என்ற பாடலுக்கான முதற்பார்வையை வெளியிட்டிருந்தோம். அந்தப் பாடல் விரைவில் வெளிவரும். கொஞ்சம் தண்ணி தாங்க – பாகம் 2 வெளிவர இருக்கிறது. மற்றும் எனது நண்பன் தமிழன்பனுடன் இணைந்து இன்னுமோர் குறும்படத்திற்கான கதையும் எழுதிக் கொண்டிருக்கிறேன். அதுவும் விரைவில் வெளிவர காத்துக் கொண்டிருக்கிறது. அத்தோடு நண்பன் கோபிசாந்துடன் இணைந்து ஒரு சொல்லிசைப் பாடலும் வெளிவர காத்திருக்கிறது. இவ் அனைத்து படைப்புக்களுக்கும் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கிறேன்.

**14) நிறைவாக, சாதிக்க நினைக்கும் உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு கூற விரும்புவது?**

யாரது பாணியையும் பின்பற்றாமல் உங்களுக்கென்ற ஒரு பாணியை தேர்ந்தெடுங்கள். விடாமுயற்சி வெற்றியைத் தரும். பொறாமை இல்லாத போட்டி குணமும், ஒற்றுமையும் இருந்தால் நாமும் நாடும் இக்கலைத் துறையும் முன்னேறலாம். வாருங்கள் ஒன்றாக சேர்ந்து உயர்வோம் நண்பர்களே.

உங்கள் வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்.







# மனித இனம் தோற்றுவித்த ஓவியக்கூறுகளும் அதில் இயற்கையின் பங்கும்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகில் மனிதன் தன் இன நாகரிகத்தின் தேவை கருதி அல்லது குண நலன்களை சித்தரிக்கும் போது இயற்கையில் இல்லாத தன் கற்பனை திறன் கொண்டு பண்புகளையும் உணர்வுகளையும் கோடுகளின் துணைகொண்டு ஓவியர்கள் உருவாக்குகின்றனர். ஆனால் மிகச்சிறந்த சில ஓவியர்களுக்கு மட்டுமே அது சாத்தியமாகின்றது கோடுகளின் மூலம் முப்பரிமாணத்தையும் கடந்து காலத்தையும் வலியையும் கூட ஓவியர்கள் சித்தரித்துள்ளனர்.



இதே போன்று வண்ணம் என்பது ஒளி பிரதிபலிப்பின் காட்சி உணர்வாகும். ஒரு ஓவியர், அவர் ஒரு கலை படைப்பு உருவாக்க விரும்பும் போதெல்லாம் வண்ணங்களை கையாளுதல் மற்றும் இணைப்பதன் மூலம் குறிப்பிடப்படும் தொடர்ச்சியான நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். மேலும் வண்ணங்களை அடையாளங்கண்டு அங்கீகரிப்பது மிகவும் சுவாரசியமான கிளை. இவற்றில் முதன்மை வண்ணங்கள், இரண்டாம் வண்ணங்கள், மூன்றாம் வண்ணங்களின் கலவைகள் என்று வண்ணச்சக்கரம் உருவாகின்றது. சிவப்பு, நீலம், பச்சை முதன்மை வர்ணங்கள். அதுதான் மற்றவற்றை கலப்பதில் இருந்து தயாரிக்க முடியாது. மற்றும் அதிகளவிலான கலவைகளை கலக்கலாம். முதன்மை வர்ணங்கள் தனித்துவமானவை. அதனோடு வர்ணசக்கரத்தில் முக்கியமானவை.

இரண்டாம் நிலை வர்ணங்கள் இரண்டு முதன்மை வர்ணங்களின் கலவையிலிருந்து புறப்படுகின்றன. அது மூன்றாவது முதன்மை நிறத்திற்கு ஒரு நிரப்பு நிறமாகும். மூன்றாம் நிலை வர்ணங்களில் இருந்து அவற்றை வேறுபடுத்துவதற்கு கோட்பாட்டில் இரண்டு முதன்மை நிறங்களை ஒரே விகிதத்தில் கலக்க வேண்டும். ஆனால் சில நேரங்களில் இரண்டாம் வண்ணத்தை பெறுவதில் கடுமையான சிக்கல்களை சந்திக்க நேரிடும். மூன்றாம் வர்ணங்களை எடுத்துக் கொண்டால் முதன்மை வண்ணம் மற்றும் இரண்டாம் நிலை ஒன்றை இணைப்பதன் விளைவாக மூன்றாம் வண்ணக்கலவை கிடைக்கிறது. எல்லா நிறங்களும் ஏற்பதும், பிறப்பதும் வெண்மை வண்ணமாகும்.

அடுத்து தூரிகையை எடுத்துக் கொண்டால் ஓவியத்தினை ஆழமிக்கதாக அழகுடனும், நேர்த்தியுடனும் காட்டப்பயன்படுத்தும் முக்கியமான பொருள். தூரிகையானது பல வடிவங்களைக் கொண்டது அவை கூர்ச்சகா – ஆலமரத்தை போன்ற தூரிகை, ஹஸ்த கூர்ச்சகா – அரச மரத்தை போன்ற தூரிகை, பாச கூர்ச்சகா – புரச மரத்தை போன்ற தூரிகை, சல்ல கூர்ச்சகா ஒவ்வொரு வர்ணத்திற்குமான ஒன்பது வகை தூரிகைகள் ஆகும். இதனைப் போன்று தூரிகைகளின் விதங்கள் பற்றி பார்த்தால் ஸ்தூல – பட்டையான தூரிகை, மத்யம – சிறிய தூரிகை, சூக்சம் – மிகச்சிறிய தூரிகை என்பவற்றை குறிப்பிடலாம்.

தூரிகைக்கு அணில், காட்டுச்செங்கீரியின் மயிரினை குஞ்சரத் திரளாக கொள்ளுதல் வேண்டும், நூலினால் கட்டி குஞ்சரத் திரளாக்கிக் கொள்ள வேண்டும், செப்பு அல்லது பித்தளையினாலான சுரை வழி விட்டு, கோலிணைத்து அறக்கினால் இறுக்க வேண்டும். 'ஓவ மாக்கள் ஒள்ளரக் கூட்டிய துலிகை' என நற்றிணை கூறும் பிச்சிப்பூ முகை வெட்சியின் சிற்றரும்பு, முல்லை பூ, மல்லிகை மாலைப்போதில் இதழவிழ்க்கும் தோற்றம் போன்று துகிலிகையின் குஞ்சரத்திறள் இருக்கவேண்டும். இதன்படி தூரிகை துகிலிகை எனும் எழுது கருவிகளும் ஓவியக்கலைஞன் செயற்படுங்கால் இன்றியமையாதனவாகும்.

இதனை தொடர்ந்து சுவர் அல்லது ஓவியம் வரைவதற்கான தளம்பற்றி நோக்குமிடத்து குடைய பூமி பந்தனா – சுவர், பட்ட பூமி பந்தனா – பலகை, படபூமி வந்தனா – துணி மற்றும் தாள் வகைகள் போன்றவற்றை தளங்களாக பயன்படுத்துகின்றனர். ஆரம்பகால ஓவியங்கள் சுவர்களில் வரையப்பட்டன. சுவர்களில் எழுதப்படும் ஓவியம் சுவரோவியம் எனப்படும். சாதாரண சுவரின் மீது வண்ணங்களை நுட்பமாக பயன்படுத்தி ஓவியங்கள் வரைதல் இயலாது. எனவே சுவரின் மீது பல அளவிலான ஒவ்வொரு பூச்சுக்களை பூசி விட்டு அதன் மீது அழகிய நுட்பமான ஓவியங்கள் வரையப்படுகின்றன. வண்ண அமைப்பே பல அடுக்குகளாக வரையப்படலாம். எனவே சுவரோவியங்கள் அப்பொழுதும் ஒன்றின் மீது ஒன்றாக அமைக்கப்பட்ட பல பூச்சுகளின் மீதே வரையப்படுகின்றன.

அவை ஆதாரம், அடித்தளம், வண்ணம், ஒட்டும் பொருள் என்பனவாகும். ஆதாரம், (தாங்கு தளம்) என்பது கட்டப்பட்ட சுவர் (எதன் மீது ஓவியம் எழுதப்படுகின்றதோ அது) தாங்கு தளம் அல்லது ஆதாரம் என்று கூறப்படுகிறது. அடித்தளம் என்பது ஆதாரத்தளத்தின் மீது இருக்கக்கூடிய மேடு பள்ளங்களை சமப்படுத்தி ஒரு சமமான தளத்தை அமைப்பதற்கு பூசப்படும் பூச்சு அடித்தளம் ஆகும். எடுத்துக்காட்டாக மண்பூச்சு மற்றும் சுண்ணாம்புப்பூச்சை குறிப்பிடலாம்.

சுவர் ஓவிய வண்ணம் என்பது அழுத்தமான நிறங்கள் கொண்ட மற்ற பொருட்களுக்கும் நிறமேற்றியாக இருக்கக்கூடிய எந்த பொருளையும் வண்ணம் என்று கூறலாம். பண்டைய காலத்தில் சுவர் ஓவியங்களில் மண் நிறத்தையோ, உலோகங்களிலிருந்து தயாரிக்கப்படும் வண்ணங்களையோ பயன்படுத்தினார்கள்.

அது ஒட்டும் பொருள் (ஒட்டான்) என்பது பிசின் போன்ற பொருட்களை எண்ணெய் அல்லது திரவப் பொருட்கள் ஆகியவற்றோடு வண்ணத்தைக் கலந்து பூசிய பிறகு அது காய்ந்து சுவரோடு ஒட்டிக் கொள்கின்றது. இப்படி ஒட்டிக்கொள்ள பயன்படுத்தப்படும் பொருட்கள் ஒட்டும் பொருட்கள் அல்லது ஒட்டான் எனப்படும். எடுத்துக்காட்டாக தாவரப்பிசின், விலங்குகளிலிருந்து எடுக்கப்படும் கொழுப்புப்பிசின் (வஜ்ரம்) போன்றவை, முட்டை கரு போன்றவைகளை குறிப்பிடலாம்.

இதேபோன்று இச்சுவர் ஓவியங்களை படைக்கும் முறைகள் பற்றி பார்க்குமிடத்து டெம்பரா தொழில் நுட்பம், மற்றும் பிரஸ்கோ தொழில் நுட்பம், சக்கோ தொழில் நுட்பம் போன்ற முறைகளை குறிப்பிடலாம். டெம்பரா தொழில்நுட்பம் என்பது வண்ணப் பொருட்களை உயிரியல் சார்ந்த ஒட்டான்களைப்பயன்படுத்திச் சுவரில் படியவைத்தல் டெம்பரா தொழில் நுட்பம் எனப்படும். இதற்குக் கோந்து, வஜ்ரம், முட்டைக்கரு போன்றவை பயன்படுத்தப்படும். இது பழமையான முறை இதேபோன்று பிரஸ்கோ தொழில் நுட்பம் என்பது இந்த முறையில் சுண்ணமும் மணலும் கலந்த சொரசொரப்பான பூச்சு பூசப்படும்.

அதன் மீது நுண்மையான சுண்ணத்தைக் கொண்டு வழுவழுப்பான சமதளம் உருவாக்கப்படும். சமதளம் ஈரமாக இருக்கும் போது அதன் மீது ஓவியங்கள் வரையப்பட்டுவிடும். இதற்குத் தண்ணீரோ, சுண்ணாம்பு நீரோ கலவைப் பொருட்களாகப்பயன்படுத்தப்படும். இது காய்ந்த பிறகு கரையும் திறனிலிருந்து மெதுவாக கரையாத கால்சியம் கார்பனேடாக கரிமயமாக்கும் முறையில் மாறிவிடுகின்றது.

மற்றும் சகோ தொழில் நுட்ப முறையில் காய்ந்த சுண்ணப்பூச்சின் மீது ஓவியங்கள் வரையப்படுகின்றன. வண்ணங்கள் சுன்ன நீரோடு கலக்கப்பட்டு (சில நேரங்களில் வெண்ணெய் எடுக்கப்பட்ட பாலும் கலக்கப்படுவதுண்டு) அந்த கலவை ஓவியம் வரைய பயன்படுத்தப்படுகிறது. இது தவிர்ந்து துணியை எடுத்துக் கொண்டால் கன்வஸ் மற்றும் ஹாரிக்கன் துணிவகைகள் பயன்படுத்தப்படுகிறது. இதனை வெண்மை நிற சுவர் பூச்சினால் பூசப்பட்ட மேலால் சிறிய அளவில் பச்சையும் பயன்படுத்தி துணியை ஓவியத்தளமாக பயன்படுத்துகின்றனர்.

ஆகவே மனித வரலாற்றில் ஓவியமானது மனிதனோடு இணைந்த ஒரு கலையாக இருந்துள்ளமைக்கு ஓவியமும் அதன் கூறுகளும் முக்கியமானதாக இருந்துள்ளது. தற்காலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியால் ஓவியம் வரையும் முறைகளில் மாற்றம் கண்டு வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையும் கூட ஆனால் என்னதான் மாற்றம் கண்டாலும் ஆரம்பகால ஓவியங்களும் அதன் கூறுகளும் மிகவும் சிறப்பு வாய்ந்த, பெறுமதி மிக்க உபயோகத்தன்மையையும் உயிர்ப்புடனான கலைரசனையும் கொண்டுள்ளமை என்பது மிகவும் சிறந்த சான்றுகள் ஆகும்.

**உசாத்துணை**

**ஐ.ஜேசப் தாமஸ், தமிழக ஓவியம் ஒரு வரலாறு, காலச்சுவடு பதிப்பகம், தமிழ்நாடு - 2014.**
**பாரதி புத்திரன், சித்திர மாடம், வைகை பிரின்டஸ், சென்னை - 5, 2009.**

# சீனாவின் குஞ்சுகளை நம்பியே .......



(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான சர்ச்சையின் மத்தியிலேயே இன்று வடக்கில் பண்ணைகள் தாராளமாக உள்ளன.

இவை தொடர்பில் துறைசார் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது –

எமது மக்கள் உண்ணாத, எமது மீனவர்கள் விரும்பாத, மீனவர்களை வெறும் கூலியாளாக மாற்றும் தொழிலை செய்துபொலரைஉழைக்க முனைவதை தவிர்த்து மீனவனை வளர்த்து எமது மக்கள் உண்ணும் உணவை உற்பத்தி செய்து அதனையே வளர்க்க முடியும். கடல் அட்டை கம்பனிகள், ஏற்றுமதி கம்பனிகளை வளர்த்துவிடத் துடிப்பவர்கள் மீனவனை வளர்த்து பெரு மீனை உற்பத்தி செய்து ரின்னில் மீனை அடைக்கும் தொழிற்சாலைகளை உருவாக்க முயற்சிக்கப்பட்டதா என்றால் அதற்கு இல்லை என்ற பதிலே உள்ளது. அதனால் மீனவ அமைப்புக்கள் வைக்கும் குற்றச் சாட்டுகள் நியாயமானவை. ஆயிரம் ஆண்டுகள் உள்ள மீன்பிடி முறைமை வெறும் 10 வருடத்தில் அழிந்து விடும் என எந்த ஆய்வு நிறுவனம் கண்டு பிடித்தனர், அல்லது யார் அந்த சான்றிதழை வழங்கியவர், 10 ஆண்டு கடந்த பின்பும் அதே தொழில் முறைமை அழியாது பேணிப் பாதுகாக்கப்பட்டால் இந்த தவறான கூற்றை கூறியவர்கள் என்ன இழப்பீட்டை வழங்க தயாராகவுள்ளனர் எனவும் கேள்வி எழுப்பி நிற்கின்றனர்.

# இறந்தவர்களை என்றும் நினைப்போம் அவர்களின் பணிகளைத் தொடர்வோம்

கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குனர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

அங்கம் - 02

நவம்பர் மாதம் 2ஆம் திகதி இறந்தவர்களின் நினைவு தினமாக கத்தோலிக்க திருச்சபையில் நினைவு கூரப்படுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

உலக கத்தோலிக்க திருச்சபையானது நவம்பர் மாதத்தை கத்தோலிக்க திருச்சபையில் வாழ்ந்து இறந்து போன அனைவருக்காகவும் செபிக்கும் மாதமாக அறிவித்துள்ளமை யாவரும் அறிந்ததே. இவ் அறிவிப்பு உலகம் முழுவதிலும் பிரமாணிக்கமாக கடைப்பிடிக்கப் பட்டு வரும் ஒரு விடயமாகும். நவம்பர் மாதத்தில் இறந்தவர்களை நினைப்போம் - அவர்களுக்காக செபிப்போம் என்ற இவ்வாக்கம் இந்த நவம்பர் மாத செயற்பாடு பற்றி பேசுகிறது.

**கத்தோலிக்க ஆலயங்களில் நவம்பர் மாதம் மாலை ஒரு துக்க மணி**

யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க ஆலயங்களில் நவம்பர் மாதம் முழுவதிலும் ஒவ்வோர் நாளும் மாலை ஆறு மணி திருந்தாதி மணி அடித்த பின்னர் 6.30 மணியளவில் ஒரு துக்க மணி அடிக்கப் படுகிறது. அந்த துக்க மணியானது இறந்த உங்கள் குடும்பச் சொந்தங்கள், உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் மற்றும் செபிக்கவும் நினைவுகூரவும் யாரு மற்றவர்கள் என இருப்போர் அனைவருக்காகவும் செபியுங்கள் என்று நினைவூட்டும் அழைப்பு மணியாகும். இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் எல்லா கத்தோலிக்க ஆலயங்களிலும் இம்முறை பின்பற்றப்படுகிறது என்றே கருதப்படுகிறது. இந்த துக்க மணியை கேட்கும் போது நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே - முடிவில்லாத ஒளி அவர்கள் மேல் ஒளிர்வதாக - சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக என செபிப்போம்!

நவம்பர் மாதத்தில் கத்தோலிக்க மக்கள் சேமக்கா



லைக்கு அதாவது இறந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ள கல்லறைறைக்குச் சென்று, அதனைச் சுத்தம் செய்து, தம் அன்புறவுகளின் கல்லறையில் மலர்கள் சாா்த்தி, மெழுகு திரி ஏற்றி, அன்புப் பணிகளில் ஈடுபட்டு, இறந்தவர்களை நினைவு கூர்ந்து செபிக்கின்றனர். சேமக்காலை பராமரிப்பு என்பது வருடம் ஒரு தடவை மட்டும் நடைபெறும் ஒரு நிகழ்வாக இருப்பது வேதனைக்குரியது. நவம்பர் மாதத்தில் மட்டும் 2ஆம் திகதிக்கு முதல் நாள் மட்டும் சேமக்காலையை துப்புரவு செய்வதே சேமக்காலை பராமரிப்பாக இருக்கிறது.

**வெளிநாடுகளில் சேமக்காலைகள் அழகு மிகுந்த பூங்கா போல உள்ளன**

வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் வெளிநாடுகளில் சேமக்காலைகள் அழகு மிகுந்த பூங்கா போல் அமைக்கப்பட்டு மலர்சொடிகள் ஆங்காங்கு நடப்பட்டு புனிதமான இடமாகக் காட்சி தருவதை கண்டு பரவசமடைந்திருக்கிறார்கள். இங்கு சேமக்காலைகள் அமைதியாகச் சென்று செபிக்கவும் இளைப்பாறவும் ஏற்ற இடமாக இருக்கிறது. எமது நாடுகளில் சேமக்காலைகள் அவ்வாறு இல்லாதிருப்பது வேதனை மிக்கதே. இங்கிருக்கும் சேமக்காலைகளுக்கு அருகில் செல்லவே பயமாக இருக்கிறது. சேமக்காலைகள் அழகாகவும் அடிக்கடி பயமின்றி விரும்பிச் செல்லத்தக்க இடமாகவும் இருப்பது மரணம் பற்றிய பயத்தையும் உளவியல் ரீதியாகக் குறைக்கத் துணை புரியலாம்.

புலிகள் அமைப்பினர் தமது இறந்தவர்களை ஆரம்பத்தில் எரித்தே வந்தனர். காலப்போக்கில் கத்தோலிக்க திருச்சபையின் பாரம்பரிய முறையான புதைக்கும் முறையையும் வெளிநாடுகளில் சேமக்காலைகள் பூங்கா போல் சிறப்பாக பேணும் முறையையும் பார்த்து அதனைத் தமதாக்கி சேமக்காலைகளை மிக அழகாகப் பேணினர். சவக்காலை, சேமக்காலை, கல்லறை என்ற வார்த்தை



களை விட்டு 'துயிலும் இல்லம்' என்ற வார்த்தையைப் பாவிக்கத் தொடங்கினர்.

கடந்த கால கொடிய போரில் தம்மை அர்ப்பணித்து இறந்து போனவர்களையும் நவம்பர் மாதத்தில் நினைவு கூருகிறோம். இறந்து போனவர்களை எரிப்பதைக் காட்டிலும் புதைப்பது அவர்களை ஆண்டு தோறும் என்றாலும் நினைவு கூர - தரிசிக்க - அவர்களுக்காக வேண்ட வழி செய்கிறது.

இறந்தவர்கள் தாம் இவ்வுலகில் தெரிந்தும் தெரியாமலும் செய்த தவறுகளுக்காகத் தண்டனை பெற்றபின் இறைவனுடைய இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறுகிறார்கள் என்பதே கத்தோலிக்க நம்பிக்கையாகும். இறந்தவர்களை தூற்றுவதோ அவர்களின் மனிதப்பலவீனங்களை மிகைப்படுத்துவதோ அவர்களின் நற்பெயரைக் கெடுக்கும் செயற்பாடுகளைத் தொடர்வதோ செய்யத்தகாத செயல்களாகவே கருதப்படுகின்றன.

**இறந்தவர்கள் அனைவரும் பூஜிக்கப்பட வேண்டியவர்கள்**

இறந்தவர்களின் படங்கள் மாலையிடப்பட்டு மரியாதையுடன் பேணப்படுகின்றன - அவர்களின் கல்லறைகள் மதிப்புடன் பாதுகாக்கப்படுகின்றன - அவர்கள் ஆற்றிய நற்செயல்கள் அவர்கள் பெயரால் தொடரப்படுகின்றன - இந்த நல்ல செயல் அன்று முதல் இன்றுவரை பேணப்படுவது சிறப்பானதாகும். இரண்டாம் உலகப்போரின் போது இறந்த அன்னியர்களின் கல்லறைகள் இன்றும் நம் நாட்டில் திருகோணமலையில் பேணிப்பாதுகாக்கப்படுகின்றமை பாராட்டப்பட வேண்டியதாகும். ஆனால் உள்நாட்டுப் போரில் இறந்து போனவர்களின் கல்லறைகள் கிளறி எறியப்பட்டமை வேதனை மிக்கதாகும்.

வெறும் கல்லறைகளை அழிப்பதால் அவர்களின் வாழ்வையும் பணியையும் அழித்து விட முடியாது. சரித்திரத்தையும் சாதனைகளையும் மூடிமறைத்து விட முடியாது. இறந்தவர்கள் அனைவரும் பூஜிக்கப்பட வேண்டியவர்கள். புனிதர்களாகப் பேணப்பட வேண்டியவர்கள். இனம் - மதம் - நிறம் என்ற வேறுபாட்டைக் கடந்து மதிக்கப்படவும் மரியாதையுடன் பேணப்படவும் வேண்டியவர்கள்.

**இறப்பு என்பது மனித வாழ்வில் தவிர்க்கப்பட முடியாத ஒன்று**

இறப்பு என்பது மனித வாழ்வில் தவிர்க்கப்பட முடியாத ஒன்று. மனிதராகப் பிறந்த அனைவரும் என்றோ இறப்பை சந்தித்தே ஆகவேண்டும். இது அனைவரும் அறிந்த அதேவேளை ஏற்றுக் கொண்டுள்ள ஓர் உண்மையாகும். ஆனால் இறப்பு என்பது எங்கு - எப்போது - எப்படி எமக்கு நிகழும் என்பது யாருக்கும் தெரியாது என்பதே யதார்த்தமாகும்.

ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்று கூறப்படுகிறது. இறப்பை போர் முடிந்த பின்னரும் பல்வேறு வகைகளில் அநியாய வகையில் பலரும் சாவை சந்திப்பதை காணக் கூடியதாகவுள்ளது. கோர விபத்தில் - குடும்பத் தகராறில் - வன்முறையில் - போதைப்பொருள் மற்றும் குடிவெறியில் - தவறான முடிவு எடுத்து அசாதாரண நிலைகளில் எனப்பல வகைகளில் இறப்பு இன்று உணரப்படுகிறது.

**இன்றைக்கோ நாளைக்கோ கொல்லும் சாவு**

கத்தோலிக்க ஆலயங்களில் முன்பு பாடப்பட்டு இப்போது சற்று மறக்கப்பட்ட பின்வரும் பாடல் இதனைத் தெளிவாக விளக்குகிறது. இன்றைக்கோ நாளைக்கோ கொல்லும் சாவு - உன்னையோ என்னையோ யாம் அறியோம் - இங்கேயோ எங்கேயோ வரும் சாவு - நன்மைக்கோ தீமைக்கோ யாம் அறியோம் - ஒருநாள் வரும் நிஜமே - நேரமே நீ அறியாய் - ஆர்தான் உதவிடுவார் ஐயோ பயங்கரமே - சூழ்ந்து நிற்கும் உறவோர் துக்கம் மிகுந்தழவே - விழ்ந்தே படுக்கையின்மேல் வேதனை படுவாயே!' என்கிறது அப்பாடல்.

**பிரிவு எம்மால் தாங்கிக் கொள்ள முடியாத போது அந்தப் பிரிவு வேதனை மிக்கதாகிறது**

எம்மோடு வாழ்ந்தவர்கள் - அன்பைப் பகிர்ந்தவர்கள் சொல்லாமலே எம்மை விட்டுப் பிரியும் போது - அந்தப் பிரிவு எம்மால் தாங்கிக் கொள்ள முடியாததாகிற போது - அவர்கள் விட்டுச் செல்லும் வெற்றிடம் என்றுமே எவராலுமே நிரப்பப்பட முடியாததாக ஒன்றாக அமைகிறபோது அந்தப் பிரிவு வேதனை மிக்கதாகிறது. - தாங் கிக் கொள்ள முடியாதாகிறது - எவ்வளவு ஆறுதல் சொன்னாலும் அது போதாமலே போய்விடுகிறது - இறப்பின் பிரிவைச் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே தனித்து நின்று அனுபவித்து முடிக்க வேண்டும். அவ்வேளைகளில் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். காலம் செல்லச் செல்லவே கவலை மறக்கப்படுகிறது. கண்முன் இல்லாதவர்கள் கனதூரம் போய் விடுகிறார்கள். ஆனால் மனதை விட்டு முழுமையாகவே நீங்கிப் போய் விடுவதேயில்லை. இறந்தோர் நினைவு தினங்கள் அவர்களை நம் மனதுகளுக்குக் மீண்டும் கொண்டு வருகின்றன. இறந்தவர்களை நினைத்து செய்யப்படும் நற்செயல்கள் மற்றும் அன்புப்பணிகள் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்வதாகவும் தேவையில் இருப்போர் அவர்கள் பெயரால் வாழ்வைத் தொடர வழிசெய்வதாக






வும் இருப்பதே சிறந்தது.

**இறப்பவர்களுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை**

கத்தோலிக்க திருச்சபை இறப்பு இறையியல் பற்றி தருகின்ற போதனையை இங்கு நினைவு கூர்வது பொருத்தமானது. இறப்பவர்களுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை. இந்த மண்ணக வாழ்வு முடிந்ததும் விண்ணகத்தில் நித்திய வீடு ஆயத்தமாக உள்ளது. இந்த நம்பிக்கையிலே இவ்வுலக வாழ்வை நல்லதாக மறு உலகிற்கு நன்மை பயப்பதாக வாழ அழைக்கப்படுகிறோம். இங்கு வாழும் போது எம்மோடு வாழ்ந்த உறவுகள் நாம் வைத்திருந்த சொத்துக்கள் அனைத்தையும் விட்டு நாம் வாழ்ந்த நல்ல வாழ்வின் பயன்களை மட்டும் நம்முடன் எடுத்துச் செல்கிறோம். இறந்தவர்கள் தாம் இவ்வுலகில் தெரிந்தும் தெரியாமலும் செய்த தவறுகளுக்காகத் தண்டனை பெற்றபின் இறைவனுடைய இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறுகிறார்கள் என்பதே கத்தோலிக்க நம்பிக்கையாகும்.

**புனித மரியன்னை பேராலய சேமக்காலையை புதுப் பொலிவுடன் அமைக்கும் பணிக்கு உதவ முன்வாருங்கள்**

வெளிநாடுகளில் இருந்து தம் இறந்துபோன உறவினர் பெயரால் நற்பணிகளை மேற்கொள்ள விரும்புவோர் யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலையை புதுப் பொலிவுடன் அமைக்கும் பணிக்கு உதவ முன்வருவது இன்றைய காலத்தின் தேவையாகும். இங்கிருப்போரும் பொது நன்மை கருதியும் யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலையின் எதிர்காலம் கருதியும் தம் உறவினர்களின் கல்லறைகளைத் தோண்டி மாற்றி அமைக்கும் பணிக்குச் சம்மதம் தெரிவிக்கவும் தம்மால் இயன்ற பண உதவியைச் செய்யவும் முன்வர வேண்டும்.

சேமக்காலைகளின் கல்லறைகளைத் துப்புரவு செய்து தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருக்க அனைவரும் முயல்வோம். ஒரு நாள் நாமும் அடக்கம் செய்யப்படவுள்ள சேமக்காலைகள் நாம் வாழும்போதே நம் கண் முன்னேயே அழகுற மிளிரச் செய்வோம். நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே - முடிவில்லாத ஒளி அவர்கள் மேல் ஒளிர்வதாக - சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக என என்றும் செபிப்போம்.

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## திசை தெரியாத வழிகளும் பேராண்மை திட்டத்தின் பாதையும்




- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 179

தமிழ் மக்களின் பிரதிநிதிகள், அவர்களின் அரசியல் தலைவர்கள் மாத்திரமல்ல, யாவரும், தங்களது தார்மீகமான கடமைகளை விடுத்து தமது தலைமைத்துவங்களை திராணியற்று, அன்றில் சுயநலங்களுக்காக விட்டுக் கொடுத்து (விற்றுக் கொடுத்து என்றும் சொல்லலாம்), பாராமுகமாகவோ, அசிரத்தையாகவோ இருந்தால் அந்தச் சமுதாயம் அழிவு பாதையிலேயே சென்று இறந்து விடுவது நிச்சயம்.

இலங்கை ஒரு தேசமாக, ஒரு நாடாக, சுதந்திரத்தின் பின் கட்டி எழுப்பப்படுவதற்கு, (இது தமிழ் மக்கள் முன்னெடுத்த



டி.எஸ்.சேனநாயக்கா

அவர்கள் தேசத்துக்கும் பொருந்தும்) அவை உருவாகும் காலங்களில் அறிவாளிகளும் புத்திஜீவிகளும் தங்களது பங்களிப்பை முழுமையாகத் தர வேண்டும். தரவில்லை. இன்றுவரை புத்திஜீவிகளும், அறிவாளிகளும் பிரச்சுனைகள் எழுந்த போது, அவற்றை உறுதியுடன் எதிர்கொண்டு, நேர்மையான, நீதியான தீர்வுகளை நோக்கி சமுதாயத்தை நடத்த முற்படாதமையும், இப்பிரச்சனைகளால் எழும் மூலகாரணிகளை ஆவணப்படுத்தாது, பேசிக் கலைந்து போனதும் அவர்கள் தவறு.

பிரச்சினைகள் அநேகமாக, முறையான அணுகுமுறைகளால் தீர்க்கப்படுகின்றன. ஆனால் ஸ்ரீலங்காவிலோ சிந்திக்கப்பட்ட அல்லது அமுல்படுத்தப்பட்ட தீர்வுகள் பிரச்சினைகளை புரை ஓடிப் போக வைத்தனவே ஒழிய, மட்டுப்படுத்தவோ தீர்க்கவோ இல்லை. அரசியல் தலைவர்கள் – அறிவாளிகளுடனும் புத்திஜீவிகளுடனும் இணைந்து தங்களுக்கு ஏற்றதான ஒரு தேசிய மாதிரி அமைப்பை, தாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு தீர்வாக முன்வைத்து அணுகுவதற்குத் தவறியமையே ஸ்ரீலங்கா இன்றும் மீண்டு கொள்ள முடியாமல் பிரச்சினைகளில் தத்தளித்து கொண்டிருக்கின்றது.

சில சமயங்களில் பிரச்சினையை அடிமட்டத்தில் தள்ளுவதற்கோ, அன்றில் நீதியான தீர்வை காணாமல் இருப்பதற்காகவோ இப்படியான கருத்துக்கள் பெரும்பான்மையின் தலைவர்களால் முன்வைக்கப்பட்டன.

ஜனாதிபதி பிரேமதாஸா, பின்னர் அடிக்கடி ஜனாதிபதி மஹிந்த, 'எங்களுக்கு உரித்தான நாட்டு மக்கள் தங்களுக்காக உள்நாட்டில் ஏற்படுத்தியதான தீர்வை நோக்க வேண்டும்' என்று அடிக்கடி சொல்வர்.

450 வருடங்களுக்கு மேலான காலத்துக்கு மேற்கத்திய நாடுகளின் காலனித்துவத்துக்கு அடிமைப்பட்டுகிடந்தது இலங்கை. பிரித்தானியா சுதந்திரத்தைத் தந்து வெளியேறிய போது நாட்டின் சாதாரண குடிமக்களுக்கு சுதந்திரம் எதுவித முக்கிய மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. காலனித்துவ நாடுகளில் இருந்து மீண்ட தேசங்களின் சரித்திரங்கள் அப்படியான வைதான். இலங்கையோ குடும்பங்களின் அதிகாரங்களிலும், குடும்பங்கள் தங்களுக்கு அமைவாக ஏற்படுத்திக் கொண்ட குழுக்கள், தங்களது நலன்களைப் பாதுகாப்பதிலேதான் குறியாக இருந்தார்கள். இந்த குடும்பங்கள் வர்த்தக ரீதியாக காலனித்துவத்துக்கு அடிவருடி கொண்டிருந்தமையால் அவர்களின் முறைமைகளையே தங்கள் வசதிகளுக்காக தொடர்ந்து கொண்டு நிர்வாகத்தை கூட அந்த வழிகளில் நடத்தினர்.

டி எஸ் சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, எஸ்.டபுள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்கா என 1964 வரை இந்த குடும்பங்கள் ஆண்டன.

இப்படியாக தங்களது நலன்களையே முற்படுத்திய குடும்ப அரசாட்சிகள் புதிய பாதைகளை அமுல்படுத்தி வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு தேவையான உற்பத்தி திட்டங்களை தயாராகக விரும்பவில்லை. வாழ்வாதாரங்களுக்கு வேலை



சிறிமா

களோ, உற்பத்திக்காக காணிகளைத் தேடிய மக்களை அடக்குவதற்காக அரசியல் அதிகாரத்தில் இருந்த குடும்பங்கள் சுரண்டி வாழ்ந்த வாழ்க்கை 'பழக்கத்தில் இழைத்தவன் சுரண்டும் திட்டங்கள்தான் தயாராகி, பத்து லட்சம் தேயிலைத்தோட்ட வேலைகள் தென்பகுதி, மத்திய மாகாண சிங்களவர் கையில் போகும், அந்தத் தொழிலாளர்களுக்கான சமுதாயப் பொறுப்பு தங்களிடமிருந்து விடுபடும், அவர்கள் 16க்கும் மேற்பட்ட தேர்தல் தொகு



டட்லி

திகளில் முடிவுகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க மாட்டார்கள் என்ற கணக்கெடுப்புகளில் இந்திய வம்சாவளியினரின் பிரஜா உரிமைகளை நீக்கி, டி. எஸ். சேனநாயக்க வடக்கு – கிழக்கு மாகாணங்களின் தரிசு நிலங்களை உற்பத்திக்காக தென்பகுதி சிங்கள மக்களுக்குக் கொடுத்து, எல்லா மாகாணங்களும் இன விகிதாசாரத்தில் பெரும்பான்மை இனத்தை பிரதிபலிக்க வேண்டும் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தினார். ஆகவே டி.எஸ். சேனநாயக்க நாள்களில் இருந்தே பெரும்பான்மையின் பிரதிபலிப்புக்காக வட, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றங்கள் நடைபெற வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நிறுவனமயமாக்கப்பட்ட அரசியல் கொள்கை.

தனது குடும்ப அதிகாரத்துக்காக பண்டாரநாயக்கா வாக்கு வங்கிகளை தேடிய பொழுது, ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளைக் கலைக்காது, மகா சங்கத்தைத் துணையாக்கி, பேரினவாதத்தை முன்னெடுத்து, நாடு பௌத்தத்திற்கு முன்னுரிமை தர வேண்டும் என்ற கடப்பாட்டில், இது பின்னர் பேரினவாதமாக வளர்ந்து, இனவாதத்தையும் பேராண்மையையும் மூலதனமாக்கி, ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி தொடங்கியது.

ஆகவே சிங்களப் பேரினவாதத்திற்கு தாங்கள் எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் என்ற தெளிவு இருந்தது. அதனால் அரசாங்கங்கள் மாறினாலும் போகும் திசைகளில் ஒற்றுமையாகவே பயணித்திருக்கிறார்கள்.


இந்தியப் பிரஜா உரிமைச் சட்டம் ஆக்கிய போதே, தமிழ் மக்களை நோக்கி அவை வருகின்றன என்பதை தந்தை செல்வா கணித்து, அறிவுறுத்தி, எங்கே இவ்விடயத்திற்கு ஆதரவு பெற வேண்டுமெனத் தமிழ்நாட்டின் பெரியார் ஈவேரா, அறிஞர் அண்ணா, கருணாநிதி, நெடுஞ்செழியன் போன்றோரையும் அவர்களின் உதவியுடன் இந்திய மத்திய அரசனுடனும் தொடர்பில் இருந்தார். ஆனால் தமிழ் மக்களுடைய கிரமமாகும் ஒற்றுமையின்மை என்ற பரவணிக் குணங்கள் அவர்களின் பாதைகளை மாற்றி, எங்கே செல்ல வேண்டுமென்று திக்குத் திசை தெரியாத காட்டில் நிறுத்தி இருக்கிறது.

அப்படியும் நிலைமைகள் மாறி உள்ளனவா? இல்லை. கட்சிக்குள் அதிகாரம் தேடுவதையே முதன்மையாகக் கொண்டு, இனத்தின் அவல நிலைகளை பற்றிய அக்கறையீனமே மேலோங்கி நின்று, இப்பொழுது கைதிகள் விடுவிப்பினால் இன்னும் ஒரு பாரிய அரசியல் நகர்வு நடைபெற்றது எனப் புளங்காகிதம் கொள்கிறார்கள்.

சிறையில் இருந்து இவ்வளவு காலமும் வஷ்டிய அரசியல் கைதிகள், திராணி இருந்த தலைவர்களால் எப்பொழுதோ விடுதலை செய்யப்பட்டு இருக்க வேண்டும். இப்போது கட்டங்கட்டமாக அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என சிலர் நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலை செய்யப்பட்டு, அது புலம்பெயர் மக்களினதும் பாரிய அரசியல் நகர்வாகவும் கூறப்பட்டு, அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் தமிழ் தரப்புக்களுடன் பேச்சு வார்த்தைகளுக்காக வடபகுதிக்கு வருவதற்கான அறிவிப்புகள் வந்துள்ளன.


கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எவ்வளவு தான் பூசி மெழுகினாலும், கூட்டுக்கட்சிகள் இடையே இருக்கும் பிளவுகள், ஊடகங்கள் வழியாக சந்திகளில் எல்லாம்

பண்டா



மலிந்து நிற்கின்றது. அங்கிருக்கும் உள் வீட்டுப் பிரச்சினைகளை ரணில் நன்றாக அறியாமல் இல்லை. அதேசமயம் எடுத்த எடுப்பிலேயே பேச்சு வார்த்தைகளை 'வடக்கின்' தமிழ்ப் பிரதிநிதிகளுடன் மட்டுப்படுத்தி, இனப்பிரச்சினை என்பது வடபகுதி மக்களினது மட்டும்தான் என்ற விளக்கத்தை புகுத்துகிறார் – தீர்வு திட்டத்தின் முன்னோடியாக.

அதே நேரத்தில் எந்தத் தமிழ்த் தரப்போடும் இணைந்து இயங்காத தண்ணீர் மேல் எண்ணை போல் மிதந்து நிற்கும் கஜேந்திரகுமாரை நண்பனாக விளித்து,



தந்தை செல்வா

அவரும் தன்னுடைய பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளார் ரணில். அதில் எந்த தாக்கங்களை மனதில் கொண்டுள்ளார் என்பதை ரணில் தான் அறிவார்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# நெடுந்தீவு பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நெடுந்தீவு தெற்கு கமக்காரர் அமைப்பு கோரிக்கை

நெடுந்தீவு பிரதேசத்தில் பல்வேறு கிராம மட்ட அமைப்புகள் செயல்பாடுகள் இன்றிபுனரமைக்கப்படாதுகாணப்படுகின்ற போதும் சிறந்த முறையில் செயல்பட்டுக் கொண்டு வருகின்ற அமைப்புகளை குழப்புகின்ற விதத்தில் நெடுந்தீவு பிரதேச சபை செயற்படுவதாக நெடுந்தீவு தெற்கு கமக்கார அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

நெடுந்தீவு தெற்கு கமக்கார அமைப்பின் தலைவர் க.பகிரதன் யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நெடுந்தீவு பிரதேசம் யாழ்ப்பாணத்திலிருந்து நீண்டதூரத்தில் கடலால் சூழப்பட்ட பிரதேசமாகும். அத்தகைய பிரதேசம் அனைவராலும் கைவிடப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகிறது.

அதிகளவான சுற்றுலா பயணிகளை வரவேற்கும் இடமாக இருக்கும் நெடுந்தீவு பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை பிரதேச சபையோ துறைசார்ந்தவர்களோ மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது. பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பல வேலைகளை செய்வதற்கு இருந்தும் அதனை கொண்டு நடத்துவதற்கு உரிய அதிகாரிகளோ, துறைசார்ந்தவர்களோ தயாரில்லாத நிலை காணப்படுகிறது.

தவிசாளர் பிரதேசத்தில் இல்லாத நிலையும் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்ற மனநிலையில்லாத நிலையும் காணப்படுகிறது. நெடுந்தீவு பிரமேசத்தில் பல கிராம மட்ட அமைப்புகள் செயற்படாது உள்ளபோதும் அவற்றைப் புனரமைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

செயற்படுகின்ற அமைப்புகளை குழப்பும் விதத்தில் தவிசாளர் செயல்படுகின்றார். அதுமட்டுமன்றி அதிகாரிகளையும் அச்சுறுத்துகின்ற நிலையே காணப்படுகிறது. உள்ளூராட்சிக் குட்பட்ட பல வீதிகள் புனரமைக்கபடாத நிலை காணப்படுகிறது. விவசாய வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும் அவையும் மேற்கொள்ளப்படாது உள்ளது. எனவேநெடுந்தீவுபிரதேசத்தில் அக்கறை கொண்ட புலம்பெயர் தேசத்து உறவுகள் அரச அதிகாரிகள் மற்றும் அரசாங்கம் குறித்த விடயங்களை கவனத்தில் எடுத்து எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். – என்றார்.



# திலினி பிரியமாலியின் 4 வங்கிக் கணக்குகள் தொடர்பில் அறிக்கை கோருகிறது நீதிமன்றம்!

திகோ குழுமத்தின் உரிமையாளரான திலினி பிரியமாலிக்குச் சொந்தமான நான்கு தனியார் வங்கிக் கணக்குகள் தொடர்பான விரிவான அறிக்கைகளை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் திலினி கமகே தனியார் வங்கிகளின் முகாமையாளர்களுக்கு உத்தரவிட்டார்.

மொரட்டுவையில் உள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரிடமிருந்து நான்கு கோடி ரூபா பணம் மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் முன்வைத்த கோரிக்கையை கவனத்தில் கொண்டே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.



சந்தேக நபரான திலினி பிரியமாலி, முறைப்பாட்டாளரான வர்த்தகருக்கு டொலர்களை தருவதாகக் கூறி மேற்படி தொகையை பெற்றுக் கொண்டார் எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

# மலையக மக்கள் குறைகளை தீர்க்க ஜனாதிபதி எம்முடன் பேசவேண்டும்!

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



மலையக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது தொடர்பாக எம்மையும் அழைத்து ஜனாதிபதி பேச்சு நடத்த வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

'வடக்கு, கிழக்கு பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது தொடர்பில், வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம். இந்த முயற்சியின் ஊடாக தீர்வு காணப்பட்டால் நிச்சயம் அது பாராட்டக்கூடிய விடயமாக அமையும்.

மலையகத் தமிழர்கள் இலங்கை வந்து, அடுத்த வருடத்துடன் 200 வருடங்கள் ஆகின்றன. எமது மக்களின் பிரச்சினைகள் ஆமை வேகத்தில்தான் தீர்க்கப்பட்டு வருகின்றன. உரிமைகள் கூட பல வருடங்களுக்குப் பிறகுதான் கிடைக்கப் பெற்று வருகின்றன. எனவே, மலையக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுதொடர்பாகஎம்மையும்அழைத்து ஜனாதிபதி பேச்சு நடத்த வேண்டும்.

மலையக மக்களும் இலங்கையர்கள் தான் என்ற வாதம் தவறில்லை. அதற்காக மலையகத் தமிழர் அல்லது இந்திய வம்சாவளி தமிழர் என்ற அடையாளத்தை நாம் இழந்துவிடக்கூடாது.

இந்திய வம்சாவளி மக்களின் அடையாளமாகவே இலங்கை, இந்திய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. அதில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும் இருந்தார். எனவே, அடையாளத்தை தொலைத்து விட முடியாது.' – எனக் கூறினார்.

# மூன்று நூல்கள் வவுனியாவில் வெளியீடு

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் இளையதம்பி தருமபாலன் தொகுத்த மூன்று நூல்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளன.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராசா கலந்து கொள்கிறார். வரவேற்புரையினை திருமதி சி.குமாரதேவியும் வாழ்த்துரையை சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்களும் நூல்களின் அறிமுகத்தை கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமாரும் நிகழ்த்த வேப்பங்குளம் ஞானவைரவர் ஆலய அறங்காவலர் பொ.நாகேந்திரம் நூல்களின் முதற்பிரதிகளைப் பெற்றுக் கொள்வார்.

நூல்களின் நயவுரைகளில் 'சைவ சமய ஆலய வழிபாட்டு அமுதம்'-எஸ். எஸ்.வாசன், 'நாயன்மார்களின் வரலாறும் வழிபாடும்'-கி.உதயகுமார், 'திருவாசகம்'-திருமதி. அனுஷா மதியழகன் ஆகியோர் உரையாற்றுவர்.

நன்றியுரையை வைத்தியகலாநிதி திருமதிவிமலா விஷ்வநாதன் நிகழ்த்துவார்.மதிய போசனத்துடன் நிகழ்வு நிறைவுறும்.

# வியட்நாமில் தங்கவைக்கப்பட்ட ஈழத்தமிழர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடாது!

## ஐ.நாவிடம் சீமான் கோரிக்கை

கப்பல் விபத்தில் சிக்கி வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடாது என ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பிடம் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கோரிக் கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

கப்பல் விபத்தில் சிக்கி வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளமை அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறதெனத் தெரிவித்துள்ளார்.

நாட்டைத்துறந்து அகதிகளாகச் சென்ற ஈழத்தமிழர்களை மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்புவதென்பது சிறிதும் மனச்சான்றற்ற பெருங்கொடுமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வறுமையின் காரணமாக இருந்த உடைமைகள் அனைத்தையும் விற்றுவிட்டு பெரும் பொருட்செலவில் நாட்டைவிட்டு வெளியேறிய மக்களை மீண்டும் பொருளாதாரம் முற்றாகச் சீரழிந்துள்ள இலங்கைக்கே திருப்பி அனுப்புவதென்பது அவர்களின் நிலையை மேலும் மோசமாக்கி, வறுமையிலும் பசியிலும் வாடி சிறுக சிறுக அவர்கள் உயிரிழக்கவே வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



எனவே ஈழத்தமிழ் மக்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முடிவை உடனடியாக வியட்நாமிய அரசு கைவிட வேண்டுமென்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# யாழ்.போதனா இருதய சத்திரசிகிச்சை பிரிவு புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இருதய சத்திர கிச்சை நிலையம் புனரமைக்கப்பட்டு, யாழ். பரியோவான் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் கதிர்காமர் தம்பி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி பரியோவான் கல்லூரி முன்னாள் அதிபர் வணக்கத்துக்குரிய அருட்தந்தை ஞானபொன்ராஜ் உட்பட மருத்துவர்கள், தாதியர்கள், பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

யாழ் பரியோவான் கல்லூரி 1983ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களால் யாழ் போதனா வைத்தியசாலையின் தீவிர இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு, புதுப்பிக்கப்பட்டமையில் பகுதியளவில் தமது உதவியை வழங்கியுள்ளனர். அத்துடன் இந்த





அலகைப் பராமரிப்பதற்கும் தமது ஒப்புதலை வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.11.2022இல் வெளியிடப்பெற்றது.